உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதந்தோறும் வெளிவரும்

ஒரு தமிழ்ப்பத்திரிகை

"எனைத்தானும் நல்லவை கேட்க வனைத்தானும்
ஆன்ற பெருமை தரும்"—திருவள்ளுவர்.

தொகுதி-௪௰.] சுபானு-௵ ஆனி ௴ [பகுதி-௮.

Vol. 40. June–July 1943. No. 8.

உள்ளுறை.

கம்பராமாயணசாரம் (உத்தரகாண்டம்:)–	ஸ்ரீ. ராவ்ஸாஹிப். வெ. ப. சுப்பிரமணிய முதலியாரவர்கள் G.B.V.C.	௨௩௩—௨௪௰
செய்ந்நன்றியறிதலும் கம்பரும்:—	ஸ்ரீ. ஜெ. நாராயணசுந்தரமையங்காரவர்கள்	௨௪௧—௨௫௮
மதுரைத்தமிழ்ச்சங்க நிர்வாகஸபைத்தீர்மானங்கள்:—		௨௫௯—௨௬௰
தனித்தமிழ்ப்பரீக்ஷைத் தேர்ச்சிக்குறிப்பு:—		௨௬௧—௨௬௨
பண்டைத்தமிழர்:—நல்லூர். சுவாமி ஞானப்பிரகாசரவர்கள்		௨௬௩—௨௭௨

பத்திராசிரியர்—திரு. நாராயணையங்கார்.

வருஷம் ஒன்றுக்கு ரூ. 4.] [தனிப்பிரதி அணா—8.

வெளிநாடுகளுக்கு ரூ. 4—8—0.

1943.

Printed by Srimathu R. Shanmuga Rajeswara Naganatha Sethupathy Avl., and Published by Thiru. Narayana Iyengar at the Tamil Sangam Power Press, No. 54, Tamil Sangam Road, Madura.

ஒரு வேண்டுகோள்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதமொருமுறை வெளிவரு
இச்செந்தமிழ்ப்பத்திரிகையில் வெளியிடுமாறு பொருளுரைகளு
மதிப்புரைவேண்டிப் புத்தகம் முதலியனவும் அனுப்புவோர் அவற்றை
பத்திராசிரியர், செந்தமிழ், மதுரைத்தமிழ்ச்சங்கம், மதுரை என்
விலாசமிட்டும்,

செந்தமிழில் வெளியிடுமாறு அனுப்பும் விளம்பரங்களையு
பாண்டியன்புத்தகசாலைக்கு நன்கொடையாக அனுப்பும் புத்த
முதலியவைகளையும், செந்தமிழ் செந்தமிழ்ப்பிரசுரங்கள் தமிழ்ச்சங்
பிரசுரங்கள் சங்கக்கலாசாலை சங்கப்பரீக்ஷைகள் முதலியவை சம்ப
மாக அனுப்பும் கடிதங்கள் மணியார்டர்கள் முதலியவற்றையு
இன்னும் இச்சங்கசம்பந்தமாயறியவிரும்பியெழுதும் பிறவற்றை
மானேஜர், மதுரைத்தமிழ்ச்சங்கம், மதுரை என்று விலாசமிட்
அனுப்புமாறு இதன்மூலம் கேட்டுக்கொள்ளலாயிற்று.

லக்ஷ்மீநாராயணையர்,
மானேஜ

மதுரைத்தமிழ்ச்சங்கத்தில் விற்கப்பெறும் புத்தகங்கள்.

I. சங்கப்பிரசுரம்.

		ரூ.	அ.
1.	ஞானாமிர்த மூலமும் உரையும்	1	0
2.	சைவமஞ்சரி	1	8
3.	*யாப்பருங்கலக்கணங்கள்		
4.	வைத்தியசாரசங்கிரகம்	5	0
5.	பன்னூற்றிரட்டு	3	0
6.	மகாபாரதம் அரும்பதவுரையுடன்	4	0
7.	*தோத்திரத்திரட்டு		
8.	*தமிழ்ச்சொல்லகராதி உயிர்வருக்கம் முடிய. முதற்பாகம்.	6	0
	*ஷை இரண்டாம்பாகம்	4	8
	ஷை மூன்றாம்பாகம்	5	0
9.	*அபிதானசிந்தாமணி		
10.	தொல்காப்பியம் செய்யுளியல் (நச். உரை முதலிய) ...	1	12
11.	திருவருணைக்கலம்பகம்	0	6
12.	*அமுதாம்பிகைபிள்ளைத்தமிழ்		
13.	கலைசைச்சிலேடைவெண்பா	0	6
14.	*தொல்காப்பியப் பொருளதிகார ஆராய்ச்சி ...		
15.	திருவாரூர் நான்மணிமாலை	0	4
16.	ஸ்ரீகிருஷ்ண சரித்திரவிமர்சம்	1	4
	பன்னூற்றிரட்டு (செலக்ஷன்)	0	4
	திருவாலவாய்த் திருநீற்றுப்பதிகம் முதலியன ...	0	1

உ
கடவுள் துணை,

செந்தமிழ்.

தொகுதி—சம.] சுபானு-ஹூ ஆனி௴ [பகுதி—அ.
Vol. 40. June-July 1943. No. 8.

கம்பராமாயணசாரம்

உத்தரகாண்டம்

உகஅ-ஆம் பக்கத் தொடர்ச்சி.

[ராவ்ஸாஹிப். ஸ்ரீ. வே. ப. சுப்பிரமணியமுதலியாரவர்கள் G.B.v.C.]

அ-வது திக்குவிசயப்படலம்

இராவணன், சேனையோடு பலதிசைகளிலும் சென்று, வெற்றி பெற்றதைக் கூறுவது.

இராவணன் வேதவதியைக் காணல்

'கயிலாசகிரியினின்று திரும்பிய இராவணன் ஒரு வனத்திலே ஒரு கன்னிகையைக்கண்டான். அவள் கூந்தலைச் சடையாக்கி மான்தோலை ஆடையாக்கி (நாராயணரூபதியானத்தால்) மனமும் (அந்த நாமசெபத்தால்) வாக்கும் (திருமாலை அடையப்பெற்றவளாய்க் காயத்தாலும் அவனை அடையும்படி கருதித்) திருமாலன்றி வேறொரு பொருளையும் குறியாதவளாய்த் தவஞ்செய்துகொண்டிருந்தாள்.'

"(உன் அருள்பெறும்படி) உலகத்தார் உன்னைக்குறித்துச் செய்யும் தவத்தை நீ செய்தல் தகாதது.* உன்பெயர் யாது! நீ யார்மகள்" என்று இராவணன் கேட்டான்.

---

* "உன்னைநோக்கி உலகம் செயும்தவம்
தன்னை நீ செயத்தக்கதன்று" (இப்படலம், ச)

அவள் தன்வரலாறு கூறுதல்

அவள், "குசத்துவசன் என்னும் மாமுனி வேதமோதிக் கொண்டிருந்தபோது, அவன் ஓதிய வேதத்தினின்று உற்பவித்தேன். அதனுல் என் தந்தையாகிய அந்த முனிவன் எனக்கு வேதவதியென்று பெயரிட்டான். பெண்பேசிவந்தவர்களுக்கெல்லாம் என் தந்தை 'திருமாலே என்மகளுக்கு நாயகனென்று நிச்சயம் செய்திருக்கிறேன்' என்று முடிவாகச் சொல்லிவிட்டான். அவர்களில் சம்பு என்னும் அசுரன், கோபங்கொண்டு என் பிதாவை இராத்திரிகாலத்தில் உறங்கும்வேளையில் கொன்றிட்டான். என்தாய், தீக்குளித்திறந்தாள். என் தந்தைகருத்தை நிறைவேற்றும்படி, நான் திருமாலேக்குறித்துத் தவஞ்செய்கின்றேன்" என்று கூறினுள்.

அவன் அவளே மனேவியாகும்படி வேண்டுதல்

அவன் "நான் புலத்தியமகாமுனியின் பௌத்திரன்; இலங்கைவேந்தன். என்பெயர் இராவணன். நீ என்மனேவியாகி, மூன்றுலகங்களுக்கும் முதல்வியாவாயாக. குலத்திலும் பலத்திலும் *வலத்திலும் மற்ற நலத்திலும் நாராயணன் எனக்குச் சமானமாவானு? வீணுகத் தவங்கிடந்து உன் மேனியை 'மெலியச்செய்திட்டாய்" என்று கூறினுன்.

அவள் அவனே இகழ்தல்

அவள், "அனந்தசயனனும் சங்கசக்கரதானும் திருமகள் வாழ்மார்பனும் அன்பர்க்குச் சமீபத்தனும் அன்பரல்லார்க்குத் தூரத்தனும் அதிபரிசுத்தனும் எனக்கு உற்ற துணேயும் உயிருமாய்க் கருணுகரனுன திருநாரணனேக் குறைகூறத்துணிந்து, பேய்கொண்டவன்போலப் பிதற்றுகின்ருய். இது, புலத்தியமுனி குலத்தாசனுக்குப் பொருத்தமானதா?" என்று கூறினுள்.

அவள் சாபமிடுதலும் தீயில் விழுதலும்

அவன் காமவெறிகொண்டு, அவள்கையைப்பற்ற, அவள், "எடா, அச்சமின்றிச் சொல்லக்கூடாத சொற்களேச்சொல்லித் தொடக்கூடாத என்னேத் தொட்டாய். உனக்கும் உன் இலங்கைக்கும் உன் உறவினருக்கும் கேடாக நான் பிறப்பேன்"

---

* வலம் - வெற்றி.

என்று சாபமிட்டு, (இவள் சாபத்தால் கொடிய இராவணன் மடிவான்) நாம் பிழைத்தோமென்று எல்லோரும் இயம்ப, இமையோர் பூமாரிபொழியத் தபோதனர்கள் (நாம் அக்கினியைச் சூழ வளர்த்து நடுவில்நின்று தவஞ்செய்வோமேயன்றி அந்த அக்கினியில் இவள்போலத் துணிந்து விழுந்திட வல்லேமல்லேமென்று) வியப்படைய(த் தான் நடுநின்று தவஞ்செய்யும்படி சூழவளர்த்திருந்த) தீயிற் பாய்ந்து மாய்ந்தாள்.* சனகன் யாகசாலை சமைப்பதற்காக உழுதநிலத்திலே உதித்த சீதை, நெருப்பிலே குதித்த வேதவதியே' என்று அகத்தியமுனிவன் கூறினன். அவன் கூறியதைக்கேட்ட இராமன் அதிசயபாவசனாகி 'இராவணன்செயல்களில் நீ சொல்லியதுபோலச் சொல்லாமலிருக்கிற எல்லாவற்றையும் ஒன்றும் விடாமல் உரைப்பாயாக'என, அவன் உரைக்கின்றான்.

மருத்தனென்னும் மன்னன் யாகசாலையை இராவணன் அடைதல்

'வேதவதி தீக்குளித்தபின்பு, இராவணன், மருத்தனென்னும் அரசன் யாகஞ்செய்யுமிடத்தையடைந்தான். அவன் வருவது கண்டு அஞ்சி யாகத்துக்கு வந்திருந்த இந்திரன் மயிலாகவும் வருணன் அன்னமாகவும் நமன் காக்கையாகவும் குபேரன் கோம்பி (பச்சோந்தி)யாகவும் வடிவமெடுத்தார்கள். மற்றவர்களும் வெவ்வேறுருவங்கொண்டார்கள். உருமாறிய எல்லாரும் பலதிசைகளிலும் ஓடினார்கள். யாகத்தலைவனை மருத்தனைநோக்கி "எனக்குத் தோற்றேனென்றுசொல், அல்லது போர்புரியப்புறப்படு" என்று இராவணன் கூற, அவன் கோபங்கொண்டு, "நீ யார்?" என, இவன், "குபேரனைப் போரில்வென்று அவனுடைய புட்பகத்தைக் கைப்பற்றிய என்னை அறியாயோ?" என, அவன் "தமயனோடு சமர்செய்சழக்கனோ?" என்றுகூறிப் போர்புரியத்தொடங்கியபோது, யாகபுரோகிதன் அவனைத் தடுப்பானாகி "நீ போர்புரிவாயானால், யாகம் முற்றுப்பெறாது. நிறைவேறாத யாகம் உன் குலநாசத்துக்கு நிமித்தமாம்" என்றுகூறி எச்சரித்தான். யாக ஆசான் கூறியதைக் கேட்ட யாகபதியான அரசன், போர்புரிவதைக் கைவிட்டு யாகாக்கினியிருக்குமிடம் சேர்ந்தான். இராவணன் "நான் வென்றேன்"

---

* மாய்தல் - சாதல்; மறைதல்.

என்று வெற்றிமுழக்கஞ்செய்து அந்த யாகசாலையை விட்டுப் போனான்.

இந்திரன் முதலியோர் மயில் முதலியவைகளுக்கு வரமருளல்

இராவணனால் தாக்கப்படாமல் தப்புதற்காக இந்திராதியர் தாம் வடிவெடுத்த மயில் முதலிய பிராணிகளுக்கு நன்றியறியுணர்ச்சியுடன் நன்மைசெய்ய நாடினார்கள். "மயில்கள் என்னைப் போல ஆயிரங்கண்களுடையனவாகவும் என் வாகனமான மழை மேகங்களைக் காணுந்தோறும் களித்துக் கலாபம்விரித்து ஆடுவனவாகவும் ஆகுக" என்று இந்திரனும், "காகங்கள், நோயின்றித் தீர்க்காயுள் (நீண்ட ஆண்டுகள் வாழ்தல்) உடையனவும் பிதிரர்களை உத்தேசித்துப் பலியிடும் உணவுப்பொருள் பெறுவனவும் ஆகுக" என்று நமனும், "அன்னங்கள் பிரமதேவன் வாகனமாகவுள்ள அன்னம்போலத் தூய வெண்ணிறமுடையனவாகுக" என்று வருணனும், "கோம்பிகள் காமரூபிகள் (-நினைத்த உருவம்-நிறம்-கொள்வன] ஆகுக" என்று குபேரனும் வரமருளினார்கள்.

யாகம் முற்றுப்பெறுதல்

பின்பு, அவர்கள், யாகசாலைக்குவந்து மருத்தனோடுகூடி யாகம் முற்றுப்பெறச்செய்துவிட்டுத் தத்தம் இடங்களுக்குச் சென்றார்கள்.

இராவணன் அயோத்தியரசனுடன் பொருது சாபம் பெறுதல்

யாகசாலையைவிட்டுப்புறப்பட்டுச் சேனையோடு சென்ற இராவணன், எதிர்த்தோரெல்லோரையும் எமலோகத்திலேற்றினவனாய் அயோத்திநகரையடைந்து, அக்காலத்தில் அந்த நகரில் அரசு புரிந்த அனரண்ணியனைநோக்கிப் "போர்செய்தற்கு அஞ்சினேனென்று புகலுதலாவது போர்பொருதலாவது புரிவாயாக" என்றான். அரசன் வீராவேசமும் கோபாவேசமுங் கொண்டு, "இதுவரையும் இந்த நகரையாண்டவரெவரும் கேளாதவார்த்தைகளைக் கூறினாய். இருவேமும் பொருவேமாக" என்றான். இருவர் படைகளும் பொருதன. இராவணன் அரசன்சேனையை அழித்தான். அரசன் இராவணன்மேல் சோனைமாரிபோலப் பாணமாரி சொரிந்தான். அரக்கர்கோன், அந்த அம்புகள் தைத்தவைகளைப் பொருட்படுத்தாமல் அரசர்கோன் ஆவி சோர்ந்து பதைபதைக்கும்படி பணைத்துப் பெருத்த பாரப் பருங்கைகள் பத்திரட்டியுங்கொண்டு

பலமாக அறைந்து "உன் படை நொறுங்கியது. நீ அடிபட்டு விழுந்தாய். என் போருக்கு அஞ்சினய்" என்றுகூறி இடியிடித் தாற்போலப் பெருநகை* செய்தான். அரசன், "ஏ, கெடுமதியுடையோனே, நான் தோற்றேனென்று சொல்லிச் சிரித் தாயே. நான் முதுகிடவில்லை. போர்செய்தற்கு முன்வைத்த காலைப் பின்வாங்கவில்லை. என் தேகத்தைக்கொன்றாலும் என் வீரத் தைக் கொல்லல் இயலாதது. (வெற்றியினும் வீரம் மேலானது)" என்று கூறிக் "காலத்தைக் கடப்பவரில்லை. (நான் துன்புறுங்காலம் வந்ததால் துன்புற்றேன்). நீ என்னை இகழ்ந்து சிரித்தாயாதலால், என்குலத்தில் உதிக்கும் இராமனுடைய கொடியபாணங்களால் உன் பத்துத்தலைகளும் அறுக்கப்பட்டுக் கொத்தாகப் பனங்காய்க் குலைபோலப் பூமியில்விழுந்து புரள்வனவாக" என்று சபித்தான். அந்தச் சாபத்தை அலட்சியஞ்செய்து (இறந்துகொண்டிருக்கும்) அரசன்மேல் அளவற்ற அம்புகளை இராவணன் எய்துவிட்டுப் போவானனன்.

இராவணனை எமனேடு போரும்படி நாரதன் தூண்டல்

அப்போது, அங்கே, நாரதன் வந்து, அரசனுடலைப் பார்த் துப் பரிதாபமடைந்து, இராவணனைநோக்கிப் "பிணத்தை வெட் டிப் பெறும்பேறுண்டோ! (இறந்த அரசன்மேல் அம்புகளெய்து அடைந்த பயன் யாது?) நரியை எதிர்த்துச் சிங்கம் பொருவ துண்டோ? பசியும் நோயும் அற்பாயுசுமுடைய மனிதரோடு பொருதாயென்று கேள்வியுற்றேன், பெற்றோர் அலறும்படி பிள்ளை களையும் பிள்ளைகள் கதறும்படி பெற்றோரையும் இரக்கமின்றிக் கொல்லும் குற்றமிகுந்த எமனுடையவலையிற்பட்டுக் குலைந்து ஆதர வற்று மடியும் எளிய மனிதரொடு பொருதல் நியாயமன்று" என்று கூறினன். அதுகேட்ட இராவணன் "எம்பெருமானே, நீ தகாத தென்று சாற்றியதையே யான் செய்திருக்கின்றேன். வேறு செய் யத்தக்கது யாதென்று செப்புவாயாக" என, நாரதன், மகிழ்ந்து, "நீ நல்லவன் (-அறிவாளி) இப்போதேபோய் எமனேடு பொருவா யாக. நீ செயமடைவது திண்ணம்" என்று கூறினன். அரக் கன், முனிவனை அடிபணிந்து விடைகொடுத்தனுப்பினன். உடனே,

---

* நகை - சிரிப்பு.

அவன், மனவேகத்தினும் மிகுவேகமுடைய புட்பகத்திலே சேனையுடனேறித் தென்திசைநோக்கிச் செல்வானானன்.

இராவணன் பொருதற்கு வருதலை நாரதன் நமனுக்கு அறிவித்தல்

நாரதன் அந்த விமானவேகத்தினும் மிகுவேகமாகச்சென்று எமபுரத்தை முன்னதாக அடைந்து நமனைக் கண்டான். அவனை வணங்கி வரவேற்று "அடிகள் இங்கெழுந்தருளிய காரியம் யாது" என்று நமன் வினவ, "இராவணன் பிரமதேவனிடம்பெற்ற வர பலத்தினால் அகந்தை மிகுந்து உன்மேற் படையெடுத்துவருதல் கண்டு என்மனம் பொறுக்காமல் அவன் வருவதை உனக்குத் தெரிவிக்கும்படி தூண்டியதனால் வந்தேன்" என்று நாரதன் விடையளித்தான்.

இராவணன் எமபுரத்தில் சுவர்க்கவாசிகளையும் நரகவாசிகளையும் காணல்

இராவணன், (தருமஞ்செய்தவர்கள் இன்புறும் சுவர்க்கங்களும் பாவஞ்செய்தவர்கள் துன்புறும் நரகங்களுமுள்ள) எமபுரத்தை யடைந்து புண்ணியர்களுடைய இன்பவாழ்க்கையையும் பாவி யர்களுடைய துன்பவாழ்க்கையையும் கண்டான்.

இராவணன் நரகரைக் கரையேற்ற, எமபடர் எதிர்த்தல்

'இராவணன், நரகக்குழிகளினுள்ளே கிடந்தோரைக் கரை யேறச்செய்தான். அதுகண்டு, கொடிய கோபமே வடிவுகொண்டாற் போன்ற மேனியும், குரூர நோக்குடைய கண்ணும், இடியிடித்தாற் போல அதட்டிச்சொல்லும் சொல்லும், மலைக்குகைபோலும் வாயும், நஞ்சினும் கொடிய நெஞ்சும் படைத்த எமபடர்கள் "எமலோகத்தா ரெல்லாரும் அஞ்சும் நமது வலிமைக்குப் பயப்படாதவர் இராக் கதரோ?" என்று ஆரவாரித்து, "இராவணனை வளைந்து கொன்று உயிர்குடிப்போம்" என்று கொதித்து அவன்மேல் விழக் கண்டு, மகோதரன் முதலியோர் சேனையோடுசென்று அவர்களைத் தாக்கி னார்கள். இராவணன் சேனையால் தாக்குண்ட எமன்சேனை, தாக்கிய சேனையைத் தகர்த்தும், அளவற்றபலவகை ஆயுதங்களையெறிந்து இராவணன்மேனியெங்கும் இரத்தம்பொங்கி முருக்கமலர் நெருக்கமுற மலர்ந்த மலைபோலாம்படிபண்ணியும் வீரஆரவாரஞ் செய்தார்கள். அவன் உகாந்தகாலாக்கினிபோலக் கொதித்துக்

கோபித்தெழுந்து பாசுபதாத்திரத்தை (சிவனைத் தேவதையாக வுடைய பாணத்தை) விடுத்தான். அதனால் எமன்சேனை அழிந்தது. இராவணன் வெற்றிமுழக்கஞ்செய்தான்.

இராவணன் எமனோடு பொருதல்

இராவணனுடைய வெற்றிமுழக்கத்தைக் கேட்டு, எமன் கோபித்தெழுந்து இரத்தநிறக் குதிரைகள்பூட்டிய செம்பொற்றேர் மீது ஏறி, முன்னே காலன்செல்ல, இருபக்கமும் காலபாசமும் காலதண்டமும் செல்ல, உகாந்தகாலத்து ருத்திரமூர்த்திபோலச் சேனைசூழச் சென்றான். எமன் வரக்கண்ட இராக்கதசேனைவீரர் "இன்றே எல்லா உலகங்களும் நாசமாய்விடும்! நமக்கு இனிப் பிழைப்பேது! இராவணன் பகைவரைவென்றிடுதல் இன்றோடு தீர்ந்தது" என்று முதுகிட்டோடிவிட்டனர். இராவணனொருவனே தனியனாய்நின்றான். அவன் நின்ற நிலைமையைக் கண்டு, எமன், "இவன் (என்னைக் கண்டவுடனே ஓடிப்போகாமல்) என்முன் அஞ்சாதவனாய்நின்றதே, நெய்சொரியப்பெற்ற நெருப்புப்போல மேற்கிளர்ந்து (தாக்கி) என்னை வென்றதற்கொப்பாம்"* என்றுகூறி ஈட்டி வேல் வச்சிராயுதம் முதலிய படைகளை எறிந்தான். அவைகளை இராவணன் தன் அம்புகளால் அறுத்துத்தள்ளி முனையிலே நெருப்புள்ள பாணங்களைவிடுத்து எமனை வருந்தச்செய்தான். இவ்வாறாக இருவரும் இரவுபகல் ஏழுநாள் இடைவிடாமல் ஒருவரையொருவர் சோர்ந்தசமயம் நேர்ந்தபோது வெல்லமுயன்று பொருதுகொண்டிருக்கும்போது, இராவணன் எமனுடைய தேர்ப்பாகன்மேலும் காலன்மேலும் எமன்மேலும் ஆயிரம் அம்புகளெய்து தைக்கச் செய்தான். உலகமெல்லாம் நடுங்கும்படி ஆலகாலவிடம்போலவும் வடவாமுகாக்கினிபோலவும் எமன் கொதித்துக் கோபித்தபோது, (காலதண்டத்தின் அதிதேவதையான) காலன், "மது கைடவர் முதலிய உன் எதிரிகளை நான் உயிருண்டதறிவாயல்லவா. என்னை

---

* "நின்றவன் நிலைமை கண்டு, நெய்சொரி அழலிற் பொங்கி
வென்றனை யன்றோ! என்முன் வெருவலன் நின்ற போதே"

அழலின் - தீப்போல்.

எவு; நான் யாதொரு தடையுமின்றி இராவணனுயிரை உண்டிடுவேன்" என்றான்.

எமன் காலதண்டம் விட நினைத்தலும் பிரமன் தடுத்தலும்

எமன் கண்கள் கனற்பொறி சிந்தக் கடுங்கோபங்கொண்டு "இவன் ஆயுட்காலத்தை ஆபோசனஞ்செய்திடுவேன்" என்றெண்ணிக் காலதண்டத்தை விடக் கருதினான். அந்தச்சமயத்தில் பிரமதேவன் பிரசன்னமாகி, "இராவணன் (நீண்டகாலம் வாழும்படி சிவனிடம் பெற்றிருக்கிற) வரபலத்தினால், காலதண்டம் அவனுயிரை வாங்கமாட்டாது. அதனை விடுதலொழிக" என்றதைக் கேட்டு எமன் காலதண்டத்தை விடுத்தலை நிறுத்தினான்.

இராவணன் ஆதிசேடனோடு உறவாடுதல்

இராவணன் "(எமன் தோற்றான்) நான் வென்றேன்" என்று எக்களித்துக்கூறிச் சேனையோடு புட்பகமேறிப் பாதாளலோகத்துக்குப்போய்ப் போகபுரிக்குள்ளேசென்று, அந்த நகரத்தையாளும் ஆதிசேடனோடு அளவளாவி உறவாகினான்.

இராவணனும் நிவாதகவசரும் போர்புரிதலும் நட்புக்கோளலும்

இராவணன் போகபுரியினின்று புறப்பட்டுச்சென்று மணிமதியென்னும் நகரத்தை அடைந்தான். அந்நகரிலுள்ள நிவாதகவசர் வெளியேவந்து அவனை யெதிர்த்தார்கள். ஒருபக்கத்தார் விடும் படைக்கலங்களை மறுபக்கத்தார் தம் படைக்கலங்களால் மாற்றுவாராக ஒருவருடகாலம் போர்நிகழ்ந்தது. பிரமதேவன் வந்து போர்விலக்கி "நீங்கள் இருபக்கத்தீரும் ஒத்தபலமுடையீராதலால் நீங்கள் பலவருடம் பொருதாலும் ஒருவரையொருவர் செயிக்கமுடியாது. இனி நீங்கள் நட்பினராயிருத்தலே நன்று" என்று நன்மதிகூறினான். இருதிறத்தாரும் நட்பினராயிருப்பதாகப் பிரமாணபூர்வமாக உறுதிசெய்துகொண்டார்கள். இராவணன் நிவாதகவசருடைய மணிமதிநகரிலே அவர்களால் விருந்தினனாக உபசரிக்கப்பெற்று ஒருவருடம் இனிதிருந்தான்.

[தொடரும்]

ஸ்ரீ:

செய்ந்நன்றியறிதலும் கம்பரும்*

அறிவிற் சிறந்த அவைத்தலைவரவர்கட்கும் செந்தமிழ்ச் சேதுவேந்தர்பெருந்தகையவர்கட்கும் ஆசிரியர்கட்கும் அன்பர் பிறருக்கும் ஒரு விஜ்ஞாபனம்.

சென்றவாண்டில் இக் கம்பர்திருநாட்கொண்டாட்டம், இவ் விடத்திலேயே சேதுவேந்தரவர்களது தலைமையில் மிக்க சிறப் புடன் நடைபெற்றது. அன்று காளமேகம்போல் எழுந்து கம்ப ரது ஈரத்தமிழமுதத்தை வாரிவழங்கிய நாவீறராகிய மஹாவித்து வான் ஸ்ரீமத் ரா. இராகவையங்கார்சுவாமிகள் நின்ற இம் மேடை யில் இன்று யான் நிற்கின்றேன். 'கன்னித்தமிழ்நூல் யானு நடாத்துகின்றேனென்று எனக்கே நகைதருமால்' என ஆன்றோ ரொருவர் கூறியவாறு எனக்கே இது நகைதருவதாகின்றது. ஆயினும், அவைத்தலைவரவர்கள் என்பால் வைத்துள்ள அன்பும், சேதுமன்னரவர்களது விஜயமும், ஆசிரியர்களுடைய ஆதரவும் என்னை ஒருவாறு ஊக்குகின்றன. இவ்வூக்கமே துணையாகக் கொண்டு, இயன்றமட்டில் என்பணியை நிறைவேற்றுகின்றேன்.

ஒருநாடு பலவகையிலும் முன்னேற்றம்பெற்றுப் போகபூமி யென்று புகழப்படுமாறு அதன் மக்கள் ஓராற்றாலும் குறைவில ராய் இன்புற்று வாழ்தற்கிடமாய் விளங்குவதற்கு அடிப்படையா யிருப்பது, அந்நாட்டுமக்கள் யாவரும் கல்விப்பேறுடையராய்த் திகழ்தலாம். கோசலநாடு, 'போகங்கனியோன்று பழுத்தது' என்று அதனைச் சிறப்பித்த நம் கம்பநாடர், அதற்கு அடிப்படையான

---

* சித்திரபானுஹு பங்குனிமீ அவ (21-3-1943) இராமநாதபுரம் இராஜாஸ் ஹைஸ்கூலில் ராவ்சாஹிப் வித்வான் ஸ்ரீ மு. இராகவையங்கா ரவர்கள்தலைமையிற் கொண்டாடப்பட்ட 'கம்பர்திருநாள்'வைபவத்தில் ஷை ஹைஸ்கூல் தமிழாசிரியர். ஜே. நாராயணசுந்தரமையங்காரவர்களால் நிகழ்த்தப்பெற்ற சொற்பொழிவு.

காரணம் கூறுவாராய், 'ஏகம்முதற்கல்வி மூளைத்தெழுந்து' என்று முன்னர்க்கூறியது இதனை வலியுறுத்தும். இக் கல்வியைக் 'கேடில் விழுச்செல்வம்' என்று சிறப்பித்தார் தெய்வப்புலமைத் திருவள்ளுவரும்.

இச் சீரிய செல்வத்தைப் பெறுதற்குத் துணையாகும் நூல்களுள், காப்பியங்கள் தலைசிறந்தன என்னலாம். ஏனென்றால், மலை, கடல், நாடு, வளநகர், பருவம், இருசுடர்த்தோற்றம் என்ற இவற்றின் வருணனைகளும் நன்மணம்புணர்தல், பொன்முடிகவித்தல், பூம்பொழில் நுகர்தல், புனல்விளையாடல் முதலியவற்றின் புனைவுகளும் கொண்டு, பலவகைச்சுவைகளும் பயந்து, அரசியல், அமைச்சியல் முதலிய பலதுறைப்பொருளும் பகர்ந்து, தன்னேரில்லாத் தலைவனொருவன்சரிதம் கூறுமுகத்தால் அறநூல்களுள்வரும் ஐயப்பாடுகளையகற்றி, விதிவிலக்குக்களை இனிதாகவும் எளிதாகவும் விளக்கி, இக்காப்பியங்கள் மெய்ந்நெறிகாட்டுகின்றனவாதலால், அவற்றை நேர்முகமாக விளம்பும்நூல்களினும் சிறந்தனவாமன்றோ?

ஆதலால், இத்தகைய காப்பியங்கள், ஒருநாட்டின் உயர்வுக்கு முதன்மைத்தான துணையாகி, உண்மைச்செல்வங்கள் செறிந்து கிடக்கும் கருவூலங்களாகும் எனலாம். எனவே, இக்காப்பியங்கள் பிற எவற்றினும் முன்வைத்து, எவ்வகையினும் போற்றற்குரியனவாம்.

இம்முறையால், இக்காப்பியங்களை இயற்றியீந்தவர்கள் மஹோபகாரிகளாகின்றனர். இங்ஙனம் உயர்ந்தகருத்துக்களின் ஆகரங்களாகிய பெருங்காப்பியங்களைப் படைத்து, உலகுய்ய உதவிய மஹோபகாரிகளாகிய மஹாகவிகளின்வரிசையில், நமது செந்தமிழ்நாடு செய்தவப்பயனாக முந்துறத்தோன்றிய தெய்வப்புலமைக் கம்பநாட்டாழ்வார் முன்னணியில் நிற்கின்றனர். இவர்,

'இம்பர்நாட்டிற் செல்வமெலா மெய்தி யரசாண் டிருந்தாலும்
உம்பர்நாட்டிற் கற்பகக்கா ஓங்குநீழல் இருந்தாலும்
செம்பொன்மேரு வனையபுயத் திறல்சேர் இராமன் திருக்கதையிற்
கம்பநாடன் கவிதையிற்போற் கற்றோர்க் கிதயம் களியாதே'

என்று சொல்லும்படி, 'செவ்விய மதுரஞ்சேர்ந்த நற்பொருளிற் சீரிய கூரிய தீஞ்சொல் வௌவிய கவி'களால் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நால்வகையுறுதிப்பொருளும் பயக்க, இராமாயணமென்னும் பெருங்காப்பியத்தைச்செய்துதந்த பெருவள்ளலாவர். ஆதலினன்றே 'கம்பநாடுடைய வள்ளல்' என்றும், 'காரணக் கோடையான் கம்பன்' என்றும் சிறப்பிக்கப்பெற்றனரென்க. புலமை நிரம்பற்குரிய பலபல துறைகளையும் சார்ந்த அரும்பெரும்பொருள்கள் பலவற்றையும் வளம்பெற உதவும் கற்பகத்தையீந்த கற்பகமென இவரைக் கருதலாம்.

ஒருவர், பிறபொருளில் ஒருசிறிது உதவினர்மாட்டும் அப்பொருளின்சிறுமைநோக்காது, அவ்வுதவியின்பெருமைநோக்கி நன்றியறிதலுடையராயிருக்கும் கடப்பாடுடையரென்றும், காரணமின்றிச் செய்த உதவி கைம்மாறுன உதவிகளிலெல்லாம் மிகப் பெரிதென்றும் ஆன்றோர் கூறுவர். அங்ஙனமாயின், எவ்வாற்றானும் ஈடற்ற இப்பேருதவியை இவ்வுலகிற்குச்செய்த இப்பெருவள்ளலார்க்கு, இவ்வுலகு செய்யத்தக்க கைம்மாறொன்றுளதென்று நினைத்தற்கும் இடமுண்டோ? இப்பெருநன்றியை மறவாது அமயம் வாய்த்துழியெல்லாம் வாயாரப் புகழ்ந்து பாராட்டி அனுபவித்தலோடு, அவர் ஈந்த பெருநிதியைப் போற்றுதலும் அவசியமன்றோ? ஆதலால், தமிழ்நாட்டுமக்கள் அவர்மாட்டு நன்றியறிதலுடையராய், அவரை நினைவுகூர்தற்பொருட்டு, அந்நாடெங்கும் இத்திருநாள் நடைபெறுவது பாராட்டத்தக்கதேயாம். அந்நோக்கத்துடனேயே, நாம் இன்று இங்குக் கூடியுள்ளோம். இத்தருணத்தில் நன்றிமறவாமைபற்றி நம் தெய்வப்புலவரிடத்து அறிவனவற்றுள் ஒருசிலவற்றை நினைத்தலும் உசிதமாகுமாதலால், அவற்றை ஒருவாறு உரைக்க நினைக்கின்றேன். முன்னர், அதற்கடியாக நன்றி மறவாமையின் சிறப்பைச் சிறிதுநோக்குதல் நன்று.

செய்ந்நன்றியறிதலாவது ஒருவர் தமக்குப் பிறர்செய்த உதவியை மறவாமை. அந்நன்றியை மறத்தல் பிராயச்சித்தமில்லாத குற்றமெனப்படுகிறது.

'எந்நன்றிகொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு'

என்றார் வள்ளுவரும். இதனைச் சற்று விரித்து,

'ஆன்முலையறுத்த அறனிலோர்க்கும்
மாணிழைமகளிர் கருச்சிதைத்தோர்க்கும்
பார்ப்பார்த்தப்பிய கொடுமையோர்க்கும்
வழுவாய்மருங்கிற் கழுவாயுமுளவென
நிலம்புடைபெயர்வதாயினும் ஒருவன்
செய்திகொன்றோர்க் குய்தியில்லென
அறம்பாடிற்றே ஆயிழைகணவ'

எனப் புறநானூறு (நச) கூறுவதும் அறிஞர் அறிவர். பிறர்செய்த நன்றி தினையளவாயினும் பனையளவாகச் செய்யப்பட்டவராற் கருதப்படுவதென்றும், அவ்வாற்றால் ஒருவர்செய்த ஒருசிறுநன்றியை நினைந்து அவர் தமக்குக் 'கொன்றன்ன இன்னாசெயினும்' அவை யாவும் மறக்கப்படுமென்றும் இவ்வறத்தின் சிறப்பு எடுத்துரைக்கப் படுகின்றது.

மற்றும், இந்நன்றியறிதல் இறையின்குணமாகவும் ஆன்றோராற் சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளது. ஆளவந்தார் என்னும் பெரியார், எம்பெருமானுடைய எல்லையில்லாத கல்யாணகுணங்களை எடுத்துரைத்த வஶீ என்று தொடங்கும் சுலோகத்தில்* அவனைக் கிருதஜ்ஞன் என்று கூறியிருப்பது இங்குக் குறிக்கத்தக்கது. கிருதஜ்ஞன் என்பதற்குச் செய்ந்நன்றியறிபவன் என்பது பொருள். இதனுள் முதல்நிற்பதாகிய 'வஶீ' என்பதற்குக் கூறப்படும் பொருள்களுள் 'எல்லாம் தன்வயப்பட்டிருக்கநிற்பவன்' என்பது

---

* வஶீ வதாந்யோ குணவாந்ருஜுஶ்ஶுசி:
ம்ருதுர்தயாளுர்மதுரஸ்ஸ்திரஸ்ஸம:
க்ருதீ க்ருதஜ்ஞஸ்த்வமஸி ஸ்வபாவத:
ஸமஸ்தகல்யாணகுணாம்ருதோததி:

ஒன்றாகும். 'குறையொன்றுமில்லாத கோவிந்தா' என்னுமாறு ஒருகுறையுமில்லாதான் பிறரொருவர்மாட்டு ஒன்றை எதிர் பார்த்து அவர்வயத்தனாய்நிற்குமாறில்லையன்றோ? பிறர் யாவ ரும் குறையுடையாராதலால் அவரன்றோ நிறைவுடைய இவனை நோக்கி இவன்வயத்தராய்நிற்பர். ஆதலால், இவ்வாற்றால் இவன் ஒருகுறையுமின்மையால் ஒருவரிடத்து ஒருதவியைவேண்டி அவர் வய்த்தனாய்நில்லாது தன்வயத்தனாமென்பது பெற்றாம். 'தன் வயத்தனாதல்' என்பது இறைவனுக்குரிய எண்குணங்களில் முதல தாகக் கூறப்படுதலும் அறிஞர் அறிவர். இங்ஙனம் இவன் ஒருவ ரிடத்தும் ஒருதவியும் வேண்டாதவனாயிருந்தும் தன் உயரியல் பால் ஓரான்மாத் தன்னையடைதலைத் தனக்குப் பெரிய இலாப மாகக்கருதியும், தன் ஊரும்பேரும் சொல்லுதல் முதலாகிய அடி யார்செயல்களையெல்லாம் தனக்குச்செய்த கைம்மாறில்லாத பேருபகாரமாகப் பெருக்கியெண்ணியும், அவர்பக்கலிலே செய்ந் நன்றியறிதலுடையவனாயிருப்பன் என்று ஆன்றோர் கூறுவர். மற்றும் சுக்கிரீவன் முதலானார் தனக்கு உபகாரம்செய்யும்நிலையை ஏறிட்டுக்கொண்டு இவன் அவ்வுபகாரத்தை மறவாது பாராட்டி நின்றமையும் நினைக்கத்தகும். அதுபற்றியே, எல்லாம் தன்வயப் படநிற்கும் இறைமைக்குணத்தை முன்னர் எடுத்தும், பின்னர் இவ்விறைமைக்குணமுடையான் இங்ஙனம்கிருதஜ்ஞனாய்விளங்கும் உயரியல்பு தோன்ற அக்குணத்தை இறுதியில்வைத்தும் இப்பெரி யார் மேற்குறித்த சுலோகத்திற் பாராட்டியனுபவிக்கின்றார் என்ன லாம். மற்றும், வான்மீகிமுனிவன், எல்லா நற்குணங்களுக்கும் இருப்பிடமான புருடோத்தமன் யார்? என்று தொடக்கத்தில் வினவுகையில், 'எவன் செய்ந்நன்றியறிபவன்?' என்று வினவியதும், அவன் இராமபிரானென்று கொள்ளப்பெற்றதும் இதனை வலி யுறுத்தும். இராமபிரானிடத்து இக்குணம் எங்ஙனம் விளங்கிற்று என்பதனை அவன்சரிதத்தால் நன்கறியலாம்.

இனி, இவ்வுயாரத்தைக் குறித்துக் கம்பரிடத்து அறிவனவற் றுள் ஒருசில நோக்கப்படும்.

'உய்யநிற் கடயம் என்றான் உயிரைத்தன் உயிரின் ஓம்பாக்
கையனும், ஒருவன் செய்த உதவியிற் கருத்தி லோனும்
மையுறு நெறியின் நோக்கி மாமறை நெறியின் நின்ற
மெய்யினைப் பொய்யென் றோனும் மீள்கிலா நரகில் வீழ்வார்'

என்பது வீடணனடைக்கலப்படலத்துள்ளதோர் செய்யுளாகும். இதனுள், நம் புலவர்பெருமானார் 'கிருதஜ்ஞன்' என்று சிறப்பிக்கப் பெற்ற இராமபிரான்பேச்சில்வைத்து, ஒருவன்செய்த உதவியிற் கருத்திலோனை மீள்கிலாநரகில் வீழ்வோருள் ஒருவனாக உரைத்திருக்கின்றார். இங்கு வீடணனை ஏற்றுக்கொள்ளுதற்கொத்த நியாயங்களைச் சுக்கிரீவன்முதலானோர்க்கு எடுத்துரைக்குமிடையே, அங்ஙனம் அங்கீகரிக்காது தள்ளுதலோடு, சிறிதும் இயைபுடைத்தாகாத நன்றிமறத்தலாகிய குற்றத்தை மீளாநரகில் வீழ்தலாகிய ஓரொற்றுமைபற்றி நுழைத்துச்சென்றது சிந்திக்கத்தக்கது. மீள்கிலாநரகில் வீழ்தல் கூறினமையால் நன்றிமறத்தல் உய்தியில்குற்றமாதல் புலப்படுத்தப்பட்டது. இதனை, முன்னர்க் காட்டிய குறளும் புறநானூற்றுச்செய்யுளும் விளம்பியவாறே, இப் புலவர்பெருந்தகையார்,

'சிதைவகல் காதல் தாயைத் தந்தையைக் குருவைத் தெய்வப்
பதவியந்தணரை ஆவைப் பாலரைப் பாவைமாரை
வதைபுரிகுநர்க்குமுண்டா மாற்றலா மாற்றல் மாயா
உதவிகொன்றார்க் கென்றேனும் ஒழிக்கலா முபாய முண்டோ?'

எனப் பிறிதோரிடத்துக் கூறியிருத்தலும் காணலாம்.

நாய் தன் நாயகனிடத்து மிக்க விசுவாசமுடையதாதல்பற்றி நன்றிமறவாமைக்குச் சிறந்த எடுத்துக்காட்டாக அதன் நன்றிமறவாமையைக் கூறுதல் மரபு.

'யானை யனையவர் நண்பொரீஇ நாயனையார்
கேண்மை தழீஇக் கொளல்வேண்டும் - யானை
அறிந்தறிந்தும் பாகனையே கொல்லும் எறிந்தவேல்
மெய்யதா வால்குழைக்கும் நாய்'

என்பது ஆன்றோர்வாக்கு. ஆயினும், நம் புலவர்பெருமானார் அதனிடத்தும் குற்றங்காண்கின்றார். அதனைச் சிறிது நோக்குதல் நன்று.

நாடுதுறந்துசென்ற இராமபிரானை அரசேற்குமாறு அயோத்திக்கு அழைத்துச்செல்லும்பொருட்டுத் தன் பரிவாரங்களோடு வந்து கங்கையின் வடகரைநின்ற பரதனைத் தென்கரையிலிருந்து கண்ட குகன், அவன் இராமனுக்கு இடையூறிழைக்கவந்ததாகக் கொண்டு வெகுண்டுரைப்பனவற்றைக் கூறுமிடத்து,

'அஞ்சனவண்ணன் என் ஆருயிர்நாயகன் ஆளாமே
வஞ்சனையால் அரசெய்தியமன்னரும் வந்தாரே
செஞ்சரமென்பன தீயுமிழ்கின்றன செல்லாவோ?
உஞ்சிவர் போய்விடின் நாய்குகன் என்றெனை யோதாரோ?'

என்று ஒரு கவி உள்ளது. இதனுள், இராமனைக் குகன் 'என் ஆருயிர் நாயகன்' என்கின்றான். எனவே, நன்றிமறவாமையால் நாய்போலாதலன்றே இவன் விரும்பத்தக்கதாகும்? நாயகனிடத்துத் தன்னை 'நாயேன்' என்று சொல்லிக்கொள்ளுதலன்றோ ஆன்றோர்மரபு? இவ்வடிப்பட்ட வழக்கிற்கு உலகவழக்கிலும் நூல்வழக்கிலும் எண்ணிறந்த உதாரணங்கள் காணலாமன்றோ? குகனும் 'நாவாய் 'வேட்டுவன் நாயடியேன் என்றான்' என்றும், 'பிரிகிலன் உடனேகப் பெறுகுவெனெனில் நாயேன்' என்றும் கூறியதும் நினைக்கத்தகும். இங்ஙனமாதலால், பிறர் தன்னை நாய் என்று சொல்லுதலையன்றோ குகன் விரும்புதல்வேண்டும்? அதனை அவன் தனக்குப் பாராட்டாகவன்றோ கொள்ளுதல்வேண்டும்? ஆதலால், அந்நெறியால், இங்கிருந்து இவர் உய்ந்துபோய்விட்டால், யாவரும் குகன் நன்றி மறப்பதொன்றாயினனன்றி, நாயகனிடத்து நன்றிமறவாத நாயாக நின்றிலனே என்றுசொல்லி இகழ்வரே என்றன்றே சொல்லுதல் வேண்டும்? இதனால், நன்றிமறவாமைபற்றி யாவரும் 'குகன் நாய்' என என்னைப் பாராட்டியுரைக்கமாட்டாரே என்று பொருள்படும்படி 'உஞ்சிவர் போய்விடின் நாய்குகன் என்றெனை ஓதாரே!' என்றன்றே பாடலிருத்தல்வேண்டும்? ஆதலால், ஓதாரோ? என்றது எங்ஙனம் பொருந்துமென்பது ஆராயத்தக்கது.

இடையர் தம் கிடைகாப்பதற்கு நாயைவளர்த்தல் யாவரும் நன்கறிவர். அந்நாய் அக்கிடையை நன்றாகக் காவல்செய்திருக்கும். ஆயினும், கிடையிலுள்ள ஆடுகளைத் தூக்கிச்செல்ல வரும் கள்வர், புறத்தே சில பச்சூன்தசைபற்றிய எலும்புத்துண்டுகளையிட்டு இந்நாயை வயப்படுத்திவிடுவர். இங்ஙனம், தன்காவலில்வைத்த நாயகனுரிமையைக் காவல்செய்துநிற்கும் நாய், கள்வர்கொடுக்கும் இப்பொருளால் அவர் வயப்பட்டுக் குரைத்தலும்செய்யாது, அவர்பாலும் விசுவாசத்தைப் புலப்படுத்தும் செயல்களைச் செய்துநின்று அவர் அவ்வுரிமையைக் கொண்டுபோகவிட்டிருக்குங் குற்றமுடையதாய்விடும். இதுபற்றி, 'இடைநாய்க்கிட்ட எலும்பு இது' என்னும் வழக்கு எழுந்து, அரசியலுள், ஒருவர் தம் பகைவர்க்குத்துணையாவாரை அவரிடத்திலிருந்து பிரித்துத் தமக்குத் துணையாக்கும் உபாயத்தை விளக்கக் கூறப்படுவதுமாயிற்று. இதனை,

'யானுமற் றிவ்விருந்த எம்முனும் ஆயக்கால்
வீரம் செயக்கிடந்த தில்லென்று - கூடிப்
படைமாறுகொள்ளப் பகைதூண்டல் அஃதே
இடைநாயிற் கென்பிடு மாறு'

என்னும் பழமொழிநானூற்றுச்செய்யுளால் அறியலாம். "யானும் இவ்விடத்திலிருந்த என் முன்னோனும்சேர்ந்து ஒரு வினைசெய்யத் தொடங்கியபொழுது, இதுகாறும் எம்முள் மாறுபட்டிருந்ததனாற் செருக்குற்றிருந்த பிற பகைவர் வீரஞ்செயக்கிடந்ததொரு செயலுமில்லையென்று சொல்லிப் பிறரும் தம்மோடுகூடிப் படைத்தொழிலின்கண் மாறுகொள்ளும்வகை பகைவர்க்குப் பகைமிகும்படி வீரம்பேசுதலாகிய அது, ஆடுகாத்துக்கிடக்கும் இடையர்நாய்க்குக் கள்வர் எலும்பிடுமாறுபோலும்" என்பது இதன் பிண்டப்பொருள். இச்செய்யுளில், நொதுமலாய்நின்றவரும் தம் பகைவர்க்குப் பகைவராகும்படி சொல்லுதல் கூறப்படுகின்றது. இதனால், இங்ஙனம் பேசி அவர்க்குத் துணையாவாரைப் பிரித்துத் தன்னோடு கூட்டுதலும் அடங்குதல் அறியலாம்.

இதுகொண்டு, மேலுரைத்த குகன்கூற்றை நோக்குவோமாஞல், பொருத்தமானபொருள் இனிது புலப்படுமென்க. எங்ஙனமென்ருல், இடைநாயை எலும்பிட்டு வயப்படுத்துவதுபோல், இராமனுக்கு அடிமைப்பட்டுநின்ற குகனைப் பரதன் யாதோ ஓருபாயத்தால் தன்வயபப்படுத்திவிட்டான்: அதனுல் அக்குகன் நாயகனுகிய இராமனுக்குவரும் இடையூறுநோக்காது, பரதன் சேனையொடுபுகுதற்கு இடங்கொடுத்துப் பார்த்துநின்ருெழிந்தான்: ஆதலால், நாயகன் செய்த நன்றியை மறந்து, பகைவர் கொடுக்கும் எலும்புபோன்றபொருளால் அவர்வயப்படும் நாயாயினுன்' என்று என்னை இகழ்ந்து ஓதாரோ? என்ருன் எனிற் பொருந்துதல்காண்க.

எனவே, நன்றிமறவாதார்க்கு நாயை யெடுத்துக்காட்டாகக் கூறுதலினும் குற்றமுண்மைகாட்டி, அது பூரணமாகப் பொருந்தாமை புலப்படுத்தியவாருயிற்று. இறைவனையே யெடுத்துக்காட்டாக உரைத்தல்வேண்டும் என்பர்போலும்.

இன்னும், இவ்வறத்தின்சிறப்பை, இப்புலவர், 'எள்ளரிய குணத்தாலும் எழிலாலும் இவ்விருந்த வள்ளலையே யனையான்' என்று கிருதஜ்ஞனை இராமபிராஞேடு ஒப்பிட்டு விசுவாமித்திரமுனிவஞற் சொல்லப்பட்ட பரதன்கூற்ருகவைத்துக் கூறியுள்ளதும் ஈண்டு நோக்கத்தகும்.

'கைகேயிசெய்த வஞ்சகத்தை நீ அறிந்திலைபோலும்!' என்ற கோசலையிடத்துப்பரதன் தான் நிரபராதி யென்றுகூறி, அவளைத் தெருட்டும்பொருட்டுச் சூளுரைகள் சொல்லுமிடையே 'யான் அபராதியாஞல் நன்றியைமறந்தவன் புகும் நரகம் என்னதாகுக' என்றதாக இக்கவிஞர் உரைத்திருக்கின்ருர்.

'கன்றுயி ரோய்ந்துகக் கறந்து பாலுண்டோன்
மன்றிடைப் பிறர்பொருள் மறைத்து வௌவினேன்
நன்றியை மறந்திடும் நயமில் நாவினேன்
என்றிவர் புகுநர கென்ன தாகவே'

என்னும் செய்யுளில் இதனைக் காண்க. இதனுள், 'நயமில் நாவினேன்' என்றது ஒரு விசேடத்தையுட்கொண்டு நிற்கின்றது. அது சிறிது ஆராயப்படும்.

மனம் வாக்கு காயம் என்னும் கரணங்கள் மூன்றனுள்ளும், மனத்தைப்பற்றியே, 'செய்ந்நன்றியறிதல்' என்றும், 'செய்ந்நன்றி மறவாமை' யென்றும் இவ்வறம் சொல்லப்படுகின்றது. அதனை மறத்தலே, நன்றிகோறல் எனப்படுகின்றது. வடமொழியிலும் 'உபகார ஸ்ம்ருதி' யெனப்படுகின்றது. ஸ்ம்ருதியென்பது நினைக்கை. மேலும், இப்புலவர்வாக்கிலும் 'ஒருவன்செய்த உதவியிற் கருத்திலோனும்' என்றும், 'நன்றியை மறந்திடும்' என்றும் வந்தவாறும் காண்க. இங்ஙனமாதல் என்னென்றால், மூன்று கரணங்களுள்ளும் முதலது மனம். மற்றைய இரண்டும் அதன் வழிப்பட்டனவே. ஆதலால், மனத்தில் மறவாமையுண்டாயின், அவ்வறம் அவ்வளவில்நில்லாது, இயன்றுழியெல்லாம் மேலும் செல்லும். ஆகையால் இங்ஙனம் மனத்தைப்பற்றியே இது வழங்கப்படுவதாயிற்றெனக. இங்ஙனமாகவும் நம் புலவர்பெருமானார் 'நன்றியை மறந்திடும்' என்றதனோடமையாது, 'நயமில் நாவினேன்' என மற்றையதொன்றைச்சேர்த்துரைக்கின்றார். அதன் கருத்து இங்குக் கருதத்தக்கது.

ஒருவர், தமக்குப் பிறர் ஒருதவிசெய்தாரானால், அவ்வுதவியை எஞ்ஞான்றும் நினைத்தல்வேண்டும். ஏற்புழியெல்லாம் எடுத்துரைத்தல்வேண்டும். இயன்றுழியெல்லாம் தாம் அவருக்கு உதவி செய்தல்வேண்டும். இவற்றுள், இறுதியிற் சொல்லப்பட்டது யாண்டும் யாவர்க்கும் இயல்வதில்லை. அன்றியும் அதனைச்செய்தற்கொத்த அமயம் ஒன்றும் வாயாதொழியினும் ஒழியும். ஆயினும், அவ்வுதவியை மனத்தால் நினைத்தலும் வாயாற் சொல்லிச்சொல்லிப் பாராட்டலும் அரியனவாகா. அவற்றையேனும் விடாது கொள்ளுதல்வேண்டுமெனக. எனவே, இவ்விரண்டும் தோன்றவே, 'நன்றியை மறந்திடும் நயமில் நாவினேன்' என்றாராயிற்றெனக. இவ்வாற்றால், இவற்றுள், மனத்தில் மறவாமை கூறவே நாவாற் போற்றலும் அடங்குமாயினும், அதனை வெளிப்பட விளம்பி வலியுறுத்தலை வேண்டினாரென்னல்வேண்டும். இதனாலேயே, 'நன்றியை மறந்திடும் நயமில் உள்ளத்தோன்' என்றாற்போலக் கூறாது, 'நன்றியை மறந்திடும் நயமில் நாவினேன்' என்று கூறினாரெனக. இறைவனருளிய நாவுண்டு: இயைந்த மொழியுண்டு: இரண்டையும் இணைத்துப் பிறர்செய்தநன்றியைப் போற்றியுரைக்கும் அத்துணையே வேண்டுவது. பிறர்செய்த பேருதவிக்கு இவ்வெளியசெயலையும்

செய்யலாகாதோ? இதனையும் செய்திலனேயென்பார், 'நயமில்நாவினேன்' என்றார். எனவே, இதனால், பிறர்செய்த உதவியை இடைவிடாது பலகாலும் வாயாரச் சொல்லிச்சொல்லிப் பாராட்டுதல் வேண்டும் என்பதனை வலியுறுத்தினாராயிற்று. பெருவள்ளலாகிய இராமபிரானது கதையுரைக்குமுகத்தால், இவர் அப்பெருமானது நற்குணக்கடலாடிப்போற்றலும் இதன்பாற்பட்டதேயென்க.

இனி, இங்ஙனம் வெளியிடப்பட்ட இவ்வுபாறத்தை இக்கவியரசர் எங்ஙனம் கைப்பற்றியுள்ளாரென்பது குறித்து ஒருசிறிது உரைக்கப்படும்.

ஒருவரிடத்து ஒருவர் ஈடுபாடுடையரானால், ஈடுபடப்பட்டவருடைய குணங்கள் அவ்வீடுபட்டவரையடைதல் இயல்பு. வேண்டுதலும் வேண்டாமையும் இல்லாத இறைவனது அடியை இடையறாது நினைப்பவர், தாமும் அவையிரண்டு மிலராவராதலால், அவையேதுவாகவரும் மூவகைப் பிறவித்துன்பங்களும் அவர்கட்கில்லையாம் என்பார்,

> "வேண்டுதல்வேண்டாமையிலானடி சேர்ந்தார்க்
> கியாண்டும் இடும்பை யில"

என்று வள்ளுவர் வாய்மலர்ந்தருளியதை இங்கு நோக்கிக்கொள்க. 'அடிசேர்ந்தார்க்கும் அவ்விரண்டும் இன்மையின், அவை காரணமாகவரும் மூவகைத்துன்பங்களும் இலவாயின' என, அக்குறளுரையிற் பரிமேலழகர் உரைத்திருப்பதும் காண்க. இந்நெறியே, கிருதஜ்ஞனான இராமபிரானிடத்து ஈடுபாடுடைய நம் கம்பநாடர் தாமும் கிருதஜ்ஞராயிருப்பரன்றோ? இவர், பேருபகாரிகளையும், அவர்செய்த உதவிகளையும்பாராட்டியுரைப்பதற்கு உதாரணங்கள் பல உள்ளன.

இப் புலவர்பெருந்தகையார், தம்மை இளமைதொட்டு ஆதரித்துப் பெருநிலையெய்தும்படி பேணிய திருவெண்ணெய்நல்லூர்ச் சடையப்பவள்ளல் தமக்குச்செய்த பேருபகாரத்தை மறவாது, தம் பெருங்காப்பியத்தில் அவ்வள்ளலைச் சிறப்பித்துப் பல இடங்களிற் கூறியுள்ளனர் என்பது பிரசித்தமானது. விசுவாமித்திர முனிவன் இராமனுக்குப் படைக்கலமருளியதைக் கூறும்போது,

'மன்னவர் வறுமைநோய்க்கு மருந்தன சடையன் வெண்ணெய்
அண்ணல்தன் சொல்லே யன்ன படைக்கலம் அருளினனே'

என்றதும், மிதிலைக்காட்சிப்படலத்தில், சந்திரோதயத்தைக் கூறும் போது,

'வண்ண மாலை கைபரப்பி உலகை வளைந்த இருளெல்லாம்
உண்ண வெண்ணித் தண்மதியத் துதயத் தெழுந்த நிலாக்கற்றை
விண்ணும் மண்ணும் திசையனைத்தும் விழுங்கிக்கொண்ட விரிநன்னீர்ப்
பண்ணை வெண்ணெய்ச் சடையன்றன் புகழ்போல் எங்கும் பரந்துளவால்'

என்று சிறப்பித்ததும் காண்க. இங்ஙனம் பிறஇடங்களில் வருவன வற்றையும் அறிஞர்கள் கூறக் கேட்கலாம்.

இது நிற்க, யான் சிறப்பாக இன்று விரும்புவது வேறொன் றுண்டு. அது, இராமகுணானுபவத்துக்குக் காரணரான மஹோப காரிகளிடத்து, நம் கவிச்சக்கரவர்த்தியார் அப்பேருபகாரத்தை மறவாதவராய் எவ்வளவு ஈடுபட்டுப் போற்றுகின்றனர் என்பது பற்றி ஒருசில கூறலேயாம். அதற்குமுன், இராமபிரானிடத்தும் அவன் கதையினிடத்தும் இவர் கொண்டுள்ள மனப்பான்மையை ஒரு சிறிது உரைத்துக்கொள்ளல் அவசியமாகும்.

நம் கவிச்சக்கரவர்த்தியார், இராமாயணத்தை மானுட னொருவனது வரலாற்றையுட்கொண்டதொரு வெற்றிலக்கியம்போலக் கருதவில்லை. 'படிகொண்டகீர்த்தி யிராமாயணமென்னும் பத்தி வெள்ளம்' என ஆன்றோரொருவர் கூறியதுபோல், இறைவனது பொருள்சேர்புகழமுதென்று போற்றுகின்றார். 'இன்று இவ்வுலகங் கள் இராமன் பரக்குந்தோல்புகழமுதினைப் பருகுகின்றதுவே' என்பது இக்கவிஞர்பெருமானாரது வாக்கு. இராமன் முழுமுதற் கடவுள் என்பதனை வெளிப்படப் பலஇடங்களிலும் இக்காப்பியத் தில் இவர் கூறிச்செல்வதனை அறிஞர் அறிவர். வான்மீகிமுனிவன் இதனை மறைமுகமாகவைத்து, ஓர் உத்தமபுருடன்சரிதம் கூறுவது போலத் தன் காப்பியத்தை யியற்றிச்சென்றனன் என்பர் ஆன்றோர். இங்ஙனம் மறைமுகமாகக்கிடக்கக் கண்டபொருளை, இவர் ஒரு புதையல்பெற்றாற்போல உள்ளத்தடங்கா உவகையோங்க, அதனாற் பலரும் கண்டு உய்யுமாறு, தம் காப்பியத்திற் பலஇடத்தும் பலரும்

அறிய வெளிப்படுத்துப் பறைசாற்றுவார்பான்மையில் தூற்றுகின்றனர். இராமாநுசர், தாம் திருக்கோட்டிநம்பிபால் அரிதிற்பெற்ற அரிய மறையை, அவரது ஆணையையும் கடந்து, தாம் நரகுபுகுந்தாலும் அவ் வுயர்பொருளால் உலகுய்யுமென, அதனைப் பலரும் அறியப் பரப்பினரன்றோ? இத்தகைய இயல்பால் இராமன் பரம்பொருளெனக் கம்பர் வெளிப்படவிளம்புமிடங்கள் மிகப் பல உள்ளன.

திருவவதாரப்படலத்துள், இராமன் தன் தம்பிமாரோடு வைகுதலைக் கூறும்போது, தம்கூற்றால் **'முப்பரம்பொருளுக்கும் முதல்வன் வைகுறும்'** என்று கூறியிருப்பது இதற்கோர் காட்டாகும். மற்றும்,

'வானின் றிழிந்து வரம்பிகந்த மாபூதத்தின் வைப்பெங்கும்
ஊனு முயிரும் உணர்வும்போல் உள்ளும் புறத்தும் உளன்என்ப
கூனும் சிறிய கோத்தாயும் கொடுமை யிழைப்பக் கோல்துறந்து
கானும் கடலும் கடந்திமையோர் இடுக்கண் காத்த கழல்வேந்தே'

என அயோத்தியாகாண்டத்தொடக்கத்தில் நிற்கும் காப்புச்செய்யுளும் இதற்கோர் காட்டாகும். இதனுள், கூனும் சிறிய கோத்தாயும் கொடுமையிழைப்ப, அதனால் அரசுதுறந்து கானும் கடலும் கடந்து இமையோரது இடுக்கண்காத்த கழல்வேந்தாகிய இராமபிரானே, பராகாசத்திலிருந்து ஒன்றினொன்றாக விரிந்து, வரம்புகடந்துகிடந்த பூதவிகாரங்களிலெல்லாம், ஊனுள் உயிரும் உணர்வும்போல் உள்ளும் புறமும் வியாபித்து அந்தரியாமியாகி நிற்கும் முழுமுதற்பொருளாவான் என விசதமாக விளக்கியிருத்தல் காண்க.

இன்னும், இராமன் நாடுதுறந்து கங்கைக்கரையையடைந்தபோது அங்குத் தங்கி வைகிய தவத்தினோர்கள் அப்பிரானைத் தரிசித்ததைக் கூறுமிடத்தில்,

'பெண்ணில் நோக்கும் சுவையிற் பிறர்பிறர்க்
கெண்ணி நோக்கி இயம்பரும் இன்பத்தைப்
பண்ணில் நோக்கும் பராவமுதைப் பசுங்
கண்ணில் நோக்கினர் உள்ளம் களிக்கின்றார்'

என்றதும் ஈண்டு நோக்கத்தகும். இதனுள் இவர் இராமபிரானைப் பிரும்மானந்தம் என்றும், பராவமுது என்றும் கூறுகின்றது காண்க. மற்றும், இதனுள் அவ்வானந்தத்தை வேதம் 'ஆநந்த வல்லியுபநிஷத்' என்னும் பகுதியில் விளம்பும் முறையைச் சுட்டிப் 'பெண்ணில் நோக்கும் சுவையிற் பிறர்பிறர்க்கெண்ணிநோக்கி யியம் பருமின்பம்' என்கின்றார் என்பர் அறிஞர். இம்முறையிற் கூறுதலை ஆளவந்தாரென்னும் ஆசிரியர் இயற்றிய 'ஸ்தோத்ரரத்நம்' என்னும் பிரபந்தத்திலும் காணலாம்.* இவ்வானந்தத்தையடைய முயன்று கொண்டிருந்த தவத்தினோர்தாம், கண்ணுக்கு விடயமாகாத அது தங்கள் ஊனக்கண்ணுக்கும் புலனாகும் உருப்பெற்றுத் தானே வரக் கண்டுகளித்தனரென்பார் 'பசுங்கண்ணில் நோக்கினர் உள்ளம் களிக்கின்றார்' என நம் புலவர் கூறினர் என்க. தபோதனர் யாவரும் - எங்கள் செல்கதி வந்ததென் றேமுறு - அங்கணாயகற் காணவந்தண்மினார்' என முன்னர்க் கவியில் இப்புலவர் கூறியதனால் தாம் அடையமுயல்வது தம்மையடைந்தமைகொண்டு அம் முனிவர் களித்தமை காட்டுதல் காண்க. இப்பெற்றியே, இராமன் வரவை எதிர்பார்த்திருந்த அகத்தியமுனிவனைக் கூறுமிடத்து,

'விண்ணினில் நிலத்தினில் விகற்பவுலகிற்பேர்
எண்ணினில் இருக்கினில் இருக்குமென யாரும்
உண்ணினை கருத்தினை உறப்பெறுவெனால்என்
கண்ணினில் எனக்கொடு களிப்புறு மனத்தான்'

என அம்முனிவனது உட்கோளாக உரைத்திருத்தலும் ஈண்டுக் குறிக்கத்தகும்.

இவ்வாறான வழக்குக்களை யெடுத்துக்காட்டப்புகுந்தால் ஈண்டைக் கிடம் போதாது. இங்ஙனம் வெளிப்படையாக விளம்புதலன்றியும், உய்த்துணரவைக்குமிடங்களும் எண்ணிலவாம். இப்

---

* உபர்யுபர்யப்ஜபுவோபி பூருஷாந்
ப்ரகல்ப்ய தேயேய திதந்ந ஸூரய:
மிதஸ்ய நைகைகஶுணாவதீப்ஸயா
ஸதா ஸ்திதா நோத்யமதோதிஶேரதே

என்பது இங்குக் குறித்த சுலோகமாகும்.

பெற்றியாலன்றே, இவர் தம் காப்பியத்துக்கு 'இராமாவதாரம்' என்று பெயரிட்டதும் என்க. 'நடையினின்றுயர் நாயகன்தோற் றத்தின் – இடைநிகழ்ந்த இராமாவதாரப்பேர்த் – தொடைநிரம்பிய தோமறுமாக்கதை' என்பது இவர்கூற்று. 'இராமாயணம்' என் னும் முதல்நூலின்பெயர் பின்னர் இதற்காயிற்றென்க. பெய ரிடுவதிலேயே முதல்நூலோடு மாறுபட்டு இராமன் அவதாரமூர்த்தி யென்பதனை வெளிப்படையாக நிறுவிய இதனினும், இவர் மனப் பான்மையைக் காட்ட மற்றொருசான்றும் வேண்டுமோ?

மற்றும், காப்பியவிலக்கணத்தைப்பற்றி நோக்குவாம். ஒரு காப்பியம், ஒப்புயர்வற்ற தலைமகனொருவனை யுடைத்தாதல்வேண்டு மென்று பெருங்காப்பிய இலக்கணம் பேசுகின்றது. பெருங்காப் பியநிலை பேசுங்காலை ....தன்னேரில்லாத்தலைவனையுடைத்தாய் ....'என்பது தண்டியலங்காரம். இம்முறையால் நோக்குங்கால், எவ்வாற்றானும் இராமனிற் சிறந்த ஒரு தலைமகனைக் காண்டல் அரிது. 'மண்ணிடை யாவர் இராகவனன்றி மாதவம் அறத்தோடு வளர்த்தார்' என்றார் நம் கவியரசரும். மற்றும், இவர், 'இம்மாண்கதைக்கோர் இறையாய இராமன்' என்று தெளிவாக இதனை ஓரிடத்து வெளியிட்டுள்ளதும் குறிக்கத்தகும். 'ஓர் இறை' என்பதற்கு ஒப்பற்ற இறைவன் என்பது பொருள். கதைக்கு இறை, ஓர் இறை என்க.

இறைவனுடைய அவதாரங்கள் பலவற்றுள்ளும், இராமாவ தாரத்துக்குக் குணபூர்த்தியுடைமையால் ஏற்றம் சொல்வது ஆன் றோர் மரபு, அது விரிக்கிற் பெருகும். வல்லார்வாய்க்கேட்டுணரற் பாலது. பட்டர் என்னும் பெரியாரிடத்து ஒருவர், 'அடியார்க் கெளியனாய்ப் பாண்டவர்க்குத் தூதுபோன கண்ணனுக்குள்ள நீர்மை இராமனுக்கில்லையே' என்று வினவியபோது, அப்பெரியார், 'தனக்குரிய அரசுதுறந்து பிறர்நலம்பேணற்பொருட்டுக் கழல் நோவக் கானகம் சென்றவன், தன்னைத் தூதுபோக்குவார் ஒருவர் உளரானால் போகாதிரான்! அச் சக்கரவர்த்தித்திருமகனைத் தூது போகச்சொல்வார் ஒருவர் இல்லாதகுறையேகாண்' என்றது இங்கு நினைக்கத்தகும்.

இங்ஙனம் இராமபிரான் எல்லா நற்குணங்களுக்கும் ஓர் இருப்பிடமாய்த் தன்னேரில்லாத்தலைவனாய் விளங்குதலாலேயே ஆஸேது ஹிமாசலம் இராமன் பரக்குந்தொல்புகழமுதினை வேறுபாடின்றி என்றும் யாவரும் பருகிக் களிக்கின்றனர். இப்பெற்றியாலேயே, நமது பாரதநாட்டிலுள்ள பலமொழிகளிலும் இராமசரிதம் முதன்மைத்தானம் பெற்றுள்ளதென ஆன்றோர் கூறுவர். அம்மொழிகளில் தேர்ச்சியுடைய முதற்புலவர்களாயுள்ளவர்களை இக்காப்பியத் தலைவனது நற்குணக்கடல் தன்னையே பாடும்படி ஈடுபடுத்திவிட்டதென்பர். கம்பநாடரும்,

‘செவ்விய மதுரம் சேர்ந்தநற் பொருளிற் சீரிய கூரிய தீஞ்சொல்
வவ்விய கவிஞ ரனைவரும் வடநூல் முனிவரும் புகழ்ந்தது வரம்பில்
எவ்வுலகத்தோர் யாவரும் தவஞ்செய் தேறுவான் ஆதரிக்கின்ற
அவ்வுலகத்தோ ரிழிவதற் கருத்தி புரிகின்ற தயோத்திமா நகரம்’

என்னும் செய்யுளில், இராமபிரானது இருக்கையாகிய அயோத்தி இங்ஙனம் பலமொழி முதற்றரப்புலவர்களாலும் வடநூன்முனிவராலும் புகழப்பெற்றது என்றது இதனை வலியுறுத்தும் என்பர். இதனை மதுரைத்தமிழ்ச்சங்கத்து உபதலைவரும் சிறந்த தமிழறிஞருமான ஸ்ரீமான் T. C. ஸ்ரீநிவாஸையங்காரவர்கள், ஸேதுமன்னரவர்களுடைய அரண்மனையில் ஒருசமயம் நன்கு எடுத்துரைத்ததுண்டு. அது மஹாராஜா அவர்கட்கும் அவர்களுடன் இருந்த சில நண்பர்களுக்கும் ஞாபகத்தில் இருக்குமென்று எண்ணுகிறேன்.

இம்முறையே, இத் தன்னேரில்லாத்தலைவனது நற்குணக்கடலில் ஈடுபட்டு அக்கடலாடும் ஆசையே இப்புலவர்பெருமானாரும் இப்பெருங்காப்பியத்தைப் பாட எடுத்துக்கொள்ளுதற்கு ஏதுவாயிற்றென்க. இதனை, ‘ஆசைபற்றி அறையலுற்றேன் மற்றிக்-காசில் கொற்றத் திராமன் கதையரோ?’ என்றும் ‘அன்பெனும் நறவம் மாந்தி மூங்கையான் பேசலுற்றான் என்ன யான் மொழியலுற்றேன்’ என்றும் இவர் கூறுதல்கொண்டு அறியலாம்.

‘இருள்சே ரிருவினையும் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார்மாட்டு’

என்னும் குறளுரையில், 'இறைமைக்குணங்கள் இலராயினாரை உடையரெனக்கருதி அறிவில்லார் கூறுகின்ற புகழ்கள் பொருள் சேராவாகலின், அவை முற்றவும் உடைய இறைவன்புகழே பொருள்சேர்புகழெனப்பட்டது' என்றார் பரிமேலழகர் என்னும் பேருரையாசிரியர். இங்ஙனமாதலால், இறைமைக்குணமெல்லாம் ஒருங்கே பூரணமாக அமையப்பெற்ற அவ்விறைவனுடைய அவதாரமூர்த்தியாகிய இவ் விராமன்புகழ் பொருள்சேர்புகழன்றோ? அவனன்றோ தன்னேரில்லாத்தலைவனாவான்? அவனது பொருள்சேர்புகழன்றோ புரிதற்கொத்ததாகும்? 'புரிதல் - எப்பொழுதும் சொல்லுதல்' என்பர் பரிமேலழகர்.

ஆதலால், நம் புலவர்பெருந்தகையார் அவன்சரிதம் கூறுமுகத்தால் அவனது குணானுபவம் பண்ணுகிறார் எனக்கொள்ளுதல் சாலும். அவன் தியாகமூர்த்தியாய் அறத்தை நிறுவி அடியாரைக் காத்த பெருநன்றியை மறவாது போற்றுகையோடு, இங்ஙனம் இராமகதைகூறுமுகத்தால் இராமகுணானுபவம்பண்ணுகின்றாரென்பது, இக்காப்பியத்தை உற்றுநோக்குவார்க்கு நன்குவிளங்கும். அவனை, வள்ளலென்று வாயாரப் பலஇடங்களிற் கூறிப் போற்றுகின்றார். அவன் எவ்வாறு 'வானின்றிழிந்து வரம்பிகந்த மாபூதத்தின் வைப்பெங்கும்—ஊனுள் உயிரும் உணர்வும்போல் உள்ளும் புறத்தும் உளன்' என்றாரோ அவ்வாறு அவர் அவனது குணானுபவம்பண்ணுதல் இக்காப்பியத்தில் எங்கும் ஊடுருவிநிற்கின்றது. வெண்பளிக்குப்பாத்திரம், தன்னுள்ளேயுள்ள பொருளின் நிறம் புறம்பேதோன்றத் தான் ஏற்றுநிற்குமாறுபோல, இக்காப்பியத்தினுள்ள கவிகள் இராமகுணானுபவம்பண்ணுதல் புறம்வழிந்து தோன்ற நிற்றல் காணலாம். இதுபற்றியே, இக்காப்பியத்தொடக்கத்தில் இப்பெரும்புலவர்,

> 'சிற்குணத்தர் தெரிவறு நன்னிலை
> எற்குணர்த்தரி தெண்ணிய மூன்றனுள்
> முற்குணத்தவரே முதலோ ரவர்
> நற்குணக்கட லாடுதல் நன்றரோ'

என்றுரென்க. தாம் இராமசரிதம் உரைக்குமுகத்தால் பகவானுடைய பொருள்சேர்புகழ்புரிந்து அவனுடைய நற்குணக்கடலாடும் உள்ளத்தை இதனாற் குறித்தவாறாயிற்று. அவனது தெரிவறுநன்னிலையைப் பற்றமாட்டாதவர்க்கெல்லாம் இங்ஙனம் அவனுடைய குணங்களைக் கூறியும் கேட்டும் அனுபவித்தல்செய்தற்கொத்ததென்பதும், அம்முறையில் தாம் இவ்விராமாயணம் கூறுவதால் அக்குணக்கடலாடுவதும் இதனால் விளங்கவைத்தாராதல் காண்க. இங்ஙனம் இவர் பகவானுடைய நற்குணக்கடலில் ஈடுபட்டு ஆழ்வதனாலன்றோ 'ஆழ்வார்' என்று அழைக்கப்படுவாராயினரென்க. 'கம்பநாட்டாழ்வான்கவி' என்ற தனியனும் பிறவும் காண்க. அக்குணக்கடலை 'நற்குணக்கடல்' என்றது சிந்திக்கத்தகும்.

'முன்னு மாமறை முனிவரும் தேவரும் பிறரும்
பன்னு மாமொழிப் பாரதப் பெருமையும் பாரேன்
மன்னு மாதவன் சரிதமும் இடையிடை வழங்கும்
என்னு மாசையால் யானும் ஈதியம்புதற் கிசைந்தேன்'

என வில்லிபுத்தூராழ்வார் விளம்பியிருப்பதும் அவ்வாழ்வாருடைய இத்தகைய உள்ளத்தைக் காட்டலால், இங்கு அது ஒப்பு நோக்கத்தகும்.

இங்ஙனமாதலால், இவ்விராமகுணானுபவத்துக்குக் காரணராயினாரிடத்தெல்லாம் இப்புலவர்பெருமானார் நன்றிமறவாதவராய், மிகவும் ஈடுபட்டுத் தம்பெருங்காப்பியத்தில் உரிய இடங்களிலெல்லாம் வாயாரப் போற்றுகின்றார். அவற்றுட் சில இனி நோக்கப்படும்.

[தொடரும்]

1943வரு ஜூன்மீ 21உ (சுபானுவரு ஆனிமீ 7உ) பகல் 12 மணிக்கு
இராமநாதபுரத்தில் மஹாராஜா அவர்களரண்மனையிற் கூடிய
மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் காரியநிர்வாகஸபையில் முடிவுசெய்யப்பெற்ற

தீர்மானங்களின் விவரம்.

---

1. மாட்சிமைதங்கிய கனம் இராமநாதபுரம்ராஜா R. ஷண்முக ராஜேசுவர நாகநாதசேதுபதி மஹாராஜா அவர்கள்
—அக்கிராசனாதிபதி.

2. மகா-ா-ா-ஸ்ரீ T. C. ஸ்ரீநிவாஸையங்காரவர்கள் B.A., B.L. M.L.C.
—உப-அக்கிராசனாதிபதி.

3. ,, P. ராமஸ்வாமிராஜு அவர்கள் B.A., B.L.

4. ,, A. ரங்கஸ்வாமி ஐயங்காரவர்கள் B.A.

5. ,, செ. மு. செய்யிதுமுகம்மது ஆலிம் புலவரவர்கள்.

6. ,, N. R. கிருஷ்ணஸ்வாமி ஐயங்காரவர்கள் B.A., B.L.

இவர்கள் வந்திருந்தார்கள்.

தீர்மானங்கள்.

1 சங்கமாபீசு வரவுசெலவு கணக்குகள் அங்கீகரிக்கலாயின.

2 மதுரை M. R. C. C. Bank-ல் வட்டிக்குக்கொடுத்துள்ள Fixed Deposit தொகைகளாகிய ரூ. 1,050 ரூ. 1,001 இவற்றை ஷை பாங்கிலேயே, ஒவ்வொன்றையும் மறுபடியும் இரண்டு வருஷங்களுக்கு, வருஷம் ஒன்றுக்கு ரூ. 100-க்கு $2\frac{1}{4}$ வட்டிக்குப் புதுப்பிக்கலாமென்று தீர்மானிக்கலாயிற்று.

3 சங்கத்தின் அங்கத்தினர்களிடமிருந்து வரவேண்டிய சந்தா பாக்கிவிஷயமாக எழுதிய ஆபீஸ் குறிப்பு, லிஸ்டு பிரகாரம் மூன்று வருஷங்களுக்குமுன்வரை வரவேண்டிய சந்தா பாக்கிகளை வஜாசெய்பலாயிற்று.

4 யுத்தநிலைமையினுல் பவுன் வகையராவிலை அதிகமேற்றமாயிருப்பதை முன்னிட்டு, சங்கப்பரீக்ஷைகளில் முதல்வகுப்பிற்றேறி முதற்பரிசு பெறுபவர்கட்கும் பரிசை ரொக்கமாகவே அளிக்கும்படி தீர்மானிக்கலாயிற்று.

5 சங்கவருஷோத்ஸவத்தில் படிப்பதற்காகத் தயாரிக்கப்பெற்ற அறிக்கைப்பத்திரம் அங்கீகரிக்கலாயிற்று.

6 சங்கவருஷோத்ஸவம் நடத்துவதற்கு, மாட்சிமைதங்கிய கனம் அக்கிராசனுதிபதியவர்கள் சௌகரியமான தேதி குறிப்பிடவேணுமென்று தீர்மானிக்கலாயிற்று.

7 சங்கவிதிகளில் செய்யவேண்டியதாகக் குறிப்பிட்டுள்ள சீர்திருத்தங்களை மதுரைத்தமிழ்ச்சங்க மகாஸபையோரால் ஆலோசித்துத் தீர்மானம் செய்யவேண்டி சிபார்சு செய்யலாயிற்று.

8 செந்தமிழ் உதவிப்பத்திராசிரியர் ஸ்ரீ. T. K. இராமானுஜையங்கார் கேட்டுக்கொண்டபடி, 21-6-43 முதல் 15 நாட்களுக்கு சம்பளத்துடன் ஸ்பெஷல்லீவு சாங்க்ஷன்செய்யலாயிற்று.

9 செந்தமிழ்ப் பத்திரிகையில் பக்கங்கள் குறைத்திருப்பது அங்கீகரிக்கலாயிற்று.

மதுரைத்தமிழ்ச்சங்கம், *R. Shanmuga Rajeswaran,*
21—6—'43. அக்கிராசனுதிபதி.

தனித்தமிழ்ப்பரீக்ஷைத்தேர்ச்சிக்குறிப்பு.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தார் சித்திரபானு-ஞு பங்குனி-மீ 23, 24, 25 (1943-ம்ஞு ஏப்ரல்-மீ 5, 6, 7)-ஆம் தேதிகளில் நடத்திய தனித்தமிழ்ப்பரீக்ஷைகளில் தேறிப் பரிசும், யோக்கியதாபத்திரமும் பெறும் மாணுக்கர்களின் அபிதானபத்திரம்.

பண்டிதபரீக்ஷை.

1-வது வகுப்பு.

தொடர் எண்.	பதிவு எண்.	
1	1	G. கோபாலகிருஷ்ணன், மதுரைத்தமிழ்ச்சங்கக்கலாசாலை, மதுரை.
		(முதற்பரிசு ரூ. 100 பெறத்தக்க தங்கத்தோடா.)
2	2	R. இராஜகோபாலன், மதுரைத்தமிழ்ச்சங்கக்கலாசாலை, மதுரை.
		(இரண்டாவதுபரிசு ரூ. 70 பெறத்தக்க தங்கப்பதக்கம்.)

2-வது வகுப்பு.

1	5	E. காசிநாதர், அளவெட்டிவடக்கு, சுன்னுகம், Ceylon.
2	13	S. சுப்பிரமணிய ஐயர், தாவடிரேட், கோண்டாவில், கொக்குவில்போஸ்டு, யாழ்ப்பாணம், Ceylon.
3	25	S. நடேசன், பொற்கலந்தம்பை, தெல்லிப்பளை, Ceylon.
4	19	மு. கந்தையா, ஏழாலைமேற்கு, சுன்னுகம், Ceylon.
5	28	S. சிதம்பரப்பிள்ளை, C/o இ. மருதையஞரவர்கள், வேலணை, Ceylon.
6	26	அ. கதிரவேற்பிள்ளை, ஆசிரியர், கல்வயல், சாவகச்சேரி, Ceylon.
7	12	மு. சின்னத்தம்பி, ஆசிரியன், J/Kokuvil, Ceylon.
8	23	அ. சோமசுந்தர ஐயர், உபாத்தியாயர், சாவகச்சேரி, Ceylon.

9 7 E. சின்னையா, பரமேசுவரபண்டிதாசிரியகலாசாலை, திருநெல்வேலி, யாழ்ப்பாணம், Ceylon.

10 32 G. முருகேசு, கரணவாய்தெற்கு, கரவெட்டி, Ceylon.

11 34 வி. நவரத்தினம், ஆசிரியர், அம்மன்கோவிலடி, மண்டைதீவு, யாழ்ப்பாணம், Ceylon.

12 29 P. இராமுப்பிள்ளை, ஆசிரியர், அத்தியார் இந்துக்கல்லூரி, நீர்வேலி, கோப்பாய், யாழ்ப்பாணம், Ceylon.

பாலபண்டிதபரீக்ஷை.

2-வது வகுப்பு.

1 37 சு. வே. நடராஜன், பிள்ளைத்தோப்பு, மணவாளக்குறிச்சி போஸ்டு, தென் திருவிதாங்கூர்.

2 35 G. விசுவாசம், மதுரைத்தமிழ்ச்சங்கக்கலாசாலை, மதுரை.

3 41 அ. பரமநாதர், இருபாலை, கோப்பாய், யாழ்ப்பாணம், Ceylon.

4 36 R. சங்கரமுதலியார், எழுத்தாளர், ஸ்ரீமத். சிவஞானபாலய சுவாமிகள் தமிழ்க்கல்லூரி, மயிலம், தென்னாற்காடு ஜில்லா.

5 42 V. N. ஐயாத்துரை, மட்டுவில்தெற்கு, சாவகச்சேரி, யாழ்ப்பாணம், Ceylon.

பிரவேசபரீக்ஷை.

1-வதுவகுப்பு.

1 46 V. காந்தி, மதுரைத்தமிழ்ச்சங்கக்கலாசாலை, மதுரை.
(முதற்பரிசு ரூபா 50 பெறத்தக்க தங்கப்பதக்கம்.)

2 50 ல. சண்முகசுந்தரம், மதுரைத்தமிழ்ச்சங்கக் கலாசாலை, மதுரை.

(இரண்டாவதுபரிசு ரூபா 30.)

2-வதுவகுப்பு.

1 45 M. கணபதி, மதுரைத்தமிழ்ச்சங்கக்கலாசாலை, மதுரை.

மதுரைத்தமிழ்ச்சங்கம், *R. Shanmuga Rajeswaran,*
21—6—'43. அக்கிராசனாதிபதி.

பண்டைத் தமிழர்

நல்லூர். சுவாமி ஞானப்பிரகாசரவர்கள்

(கககூ-ஆம் பக்கத் தொடர்ச்சி)

IV ஒத்த ஐதிகங்களும் பழக்கவழக்கங்களும்

மத்தியதரைக்கடலைச்சார்ந்த பழங்குலங்களாகிய எகிப்தியர் கல்தேயர் பபிலோனியர் எபிரேயர் ஆதியோருள் இருந்த பண்டைக்கால ஞாபகங்களுள் முக்கியமான ஒன்றைமட்டும் இங்கு எடுத்துச்சொல்லுவோம். அது முன்னுளில் நடந்த பென்னம்பெரியதோர் சலப்பிரளயத்தைப்பற்றியது. எகிப்தியர் தெம் எனும் மனுக்குலப்பிதாவின் நாளில் அப்பிரளயம் நடந்தது என்பர். பபிலோனியருடைய சலப்பிரளயவரலாறு கில்கமிஷ் என்பவனது கதையில் வருகிறது. முன் இயுசேபியு எனும் சரித்திராசிரியர்மூலமாய் அறியப்பட்ட கல்தேயருடைய சலப்பிரளயக்கதை 1872-ஆம் ஆண்டு கண்டெடுக்கப்பட்ட ஒரு ஆப்பெழுத்துக் கற்சாசனத்தின் பாகங்களாலும் விளங்குகிறது. அதை ஒத்ததும் சிலவிவரங்களில் திருத்தமானதுமாயுள்ள ஒருவரலாறு எபிரேயருடைய விவிலியம் எனும் நூலிற் காணப்படுகின்றது. இவை இரண்டும் பழமையான ஒரு ஊற்றிலிருந்தே வந்தனவாதல்வேண்டும் என்பது அறிஞர்கள் கருத்து.

சலப்பிரளயத்தைப்பற்றிய ஐதிகம்

விவிலியத்திற் கூறியுள்ள வரலாறு பின்வருவது: பூலோகத்தில் மனுஷருடைய துஷ்டத்தனம் மிஞ்சினதினுல், சர்வேச்சுவரன் மனிதன்முதல் மிருகங்கள் பரியந்தமும் ஊர்வனமுதல் பட்சிகள் பரியந்தமும் சகல உயிர்களையும் நாசம்பண்ணத் தீர்மானித்து, நோவா எனும் ஒருவரே நீதிமானுய் நடந்துவந்தமையால் அவரையும் அவர் மக்களையும் மட்டில் இரட்சிக்கிறவராய், அந்த நோவா என்பவரைநோக்கி: உலகம் அக்கிரமத்தால் நிறைந்திருக்கிறது. ஆகையால் பூமியோடு மனிதர் அனைவரையும் நாசப்படுத்துவேன். நீ மரப்பலகைகளால் ஒரு பேழையையுண்டுபண்ணி, அதிலே நீயும் உன்புத்திரர்களும் உன்மனைவியும் உன்புத்திரர்களின் மனைவிமாரும் பிரவேசிக்கக்கடவீர்கள். உன்னேடு காப்பாற்றிக்கொள்ளவேண்டிய சகலவித

சீவன்களிலும் ஒவ்வொருசோடு பேழையிற் சேர்ப்பாயாக என்றார். சர்வேச்சுவரன் கட்டளையிட்டபடியெல்லாம் நோவா செய்துமுடித்துத் தன்குடும்பத்தோடும் சீவசெந்துக்களோடும் பேழையினுள் போய்ச் சேர்ந்துகொள்ளச் சருவேச்சுவரன் அதன் கதவை அடைத்தார். பூமியின்மேல் நாற்பதுநாள் மழைபெய்து சலம் பிரவகித்தபோது, பேழை பெருவெள்ளத்தில் மிதந்து சென்றது. வானத்தின்கீழ் உள்ள மலைகளெல்லாம் சலத்தினால் மூடப்பட்டன. தரையில் இருந்த பிராணிகளெல்லாம் அழிந்துபோக, நோவாவும் அவரோடு பேழையிலிருந்த உயிர்களும் மாத்திரம் தப்பிக்கொண்டன. சலம் தரையின்மேல் நூற்றைம்பதுநாள் பிரவகித்துக்கொண்டிருந்தபின் வற்றத்தொடங்கிற்று. ஏழாம் மாதம் பதினேழாம் தேதியிலே நோவாவின் பேழை *அராத் என்னும் மலைகளின்மேல் தங்கிற்று. நாற்பது நாட்சென்றபின் நோவா தமதுபேழையிற் செய்திருந்த சாளரத்தைத் திறந்து ஒரு காகத்தை வெளியே விட்டார். அது சலம் வற்றுதவரையில் போகிறதும் வருகிறதுமாய் இருந்தது. பின்பு சலம் வற்றிப்போயிற்றோ என்று அறியும்பொருட்டு ஒரு புறாவை வெளியேவிட, அது தங்க இடம் காணமல் திரும்பிவந்துவிட்டது. பின்னும் ஏழுநாட்பொறுத்துப் புறாவை வெளியே விட, அதுபோய் ஒரு ஒலிவமரக்கிளையைக் கொத்திக்கொண்டு வந்து சேர்ந்தது. இதனால் சலம் குறைந்துபோய்விட்டது. என்று நோவாவுக்குத் தெரியவந்தது. பின்னும் ஏழுநாட்சென்றபின் புறாவை வெளியேவிட அது அப்பால் திரும்பிவரவில்லை. இதனால் பூமியில் சலம் முற்றாக வற்றிப் போயிற்று என நோவா அறிந்துகொண்டனர். பின் சேம்காம் யாப்பேத்து எனும் அவருடைய மக்கள் மூலமாகவே மனுக்குலம் மீண்டும் ஒருகாற் பலுகிப் பெருகுவதாயிற்று. இவர்களுடைய சந்ததியாரே எபிரேயரும் அயற்சாதியாரும் குடியிருந்த பிரதேசங்களில் நிலைகொண்டு அவ்வப்பிரிவு அடைந்த இடப்பெயர்களுக்குக் காரணபூதரானார்கள். இதுவரையும் விவிலியத்தில் உள்ளபடி.

கல்தேயருடைய சலப்பிரளயவரலாறு இயுசேபியு எனும் வரலாற்றாசிரியர் எழுதிவைத்தபடி சிலவேறுபாடுகளைக்கொண்டது. டேசியு எனும் மாதத்தின் பதினைந்தாம் தேதியில் ஒரு பெருவெள்ளம் உண்டாகும் என்று குரோனுஸ் எனும் தெய்வம் கிசித்துறு எனும் அரசனுக்குச் செப்பி, அவன் தன்னிடம்

---

* அர்மேனியா என்றும் பாடம்,

உள்ள நூல்களையெல்லாம் சிப்பருவிலுள்ள சூரியநகரியில் சேமித்துவைக்கக் கட்டளைபண்ணிற்று. இசித்துறு அவ்வண்ணம் செய்தபின், அர்மேனியா வுக்குக் கப்பலேறிச்சென்றான். பெருமழை ஓய்ந்தபின் மூன்றாம்நாள் அவன் பிரவாகம் வடிந்துபோயிற்றோ என்று அறியும்பொருட்டுப் பட்சிகளை வெளியே விட்டான். அவைகள் கரைதெரியாத கடல்போலிருந்த வெள்ளத்திலே இறங்கி நிற்க இடங்காணாமல் திரும்பிவிட்டன. வேறு பட்சிகளையும் விட்டுப்பார்த்தான். மூன்றாம்முறை பட்சிகளைப் போக்கிய போது அவைகள் சேறுபடிந்த கால்களோடு மீண்டமையால் வெள்ளம் முழுதும் வடிந்துபோயிற்றென்று கண்டான். தேவர்கள் இசித்துறுவை வானலோகத்துக்கு எடுத்துக்கொண்டார்கள். அவனது கப்பல்துண்டுகள் இன்றைக்கும் அர்மேனியாவிற் காணப்படுகின்றன. ஊர்ச்சனங்கள் அத் துண்டுகளைக்கொண்டு காப்புக்களும் கையணிகளும் செய்வார்கள் என்பது இயுசேபியு எழுதிவைத்தது.

வேறு சாதிகளுள்ளும் சலப்பிரளயவரலாறு வேறு வேறு மாற்றங்க ளுடன் காணப்படுகின்றது. பினீசியர், சிரியர் மட்டும் அல்ல, பார்சிகர் சீனரோடு அமெரிக்காவின் பண்டைக்குலங்களும் அதனை ஒவ்வொரு விதத் திலே நினைவூட்டிக்கொண்டிருந்தன. பினீசியருடைய கதையின்படி, ஒரு கால் கடற்றெய்வம் கரைபுரண்டுபோய்த் தரைத்தெய்வத்தை அழித்துவிட லாயிற்று. சிரியர், சலப்பிரளயம் வடிந்து பாய்ந்தது இயறப்போலீஸ் பட்டணத்துக்கணித்தாயுள்ள ஒரு பெருங்கிடங்கினுள்ளாம் என்றனர். பார்சிகர் மனுக்குலம் கெட்டுப்போயினமையால் அதிறிமான் அதை ஒரு பெருவெள்ளத்தினால் அழித்தனன் என்றனர். சீனருடைய ஐதிகங்களின்படி அவர்களுடைய பெரிய குருவாகிய போகி என்பவரும் அவர்மனைவியும் மூன்று ஆண்மக்களும் மூன்று பெண்மக்களும் ஓர் பெரும் ஆபத்திலிருந்து தெய்வச்செயலாய்த் தப்பிக்கொண்டோர் ஆகின்றனர். சூக்கிங் எனும் அவர்களுடைய பழைய நூலிற் சலப்பிரளயம் குறிக்கப்படுகிறது. பிரவாகம் நாற்புறமும் உள்ள குன்றுகளை மூடி மலைகளின் உச்சிகளுக்கு மேலாக எழுந் தது என்று சொல்லப்பட்டிருக்கிறது. அமெரிக்காவின் இரோக்குவர் சொல்லுகின்றபடி, ஒருகாலம் பெருமழைபொழிந்து பூமியை மூடப்போகிற தென்று ஒரு நாய் தன் எசமானனுக்கு அறிவித்து, அவன் தப்பிக்கொள்ள விரும்பினால் ஒரு வள்ளத்திலே தனக்கு வேண்டிய எல்லாவற்றோடும்

ஏறிக்கொள்ளவேண்டும் என்று புத்திபுகட்டிற்றும். மெக்சிக்கருடைய கதை வேறொருவகையானது. அவர்களுடைய பழஞ்சித்திரங்களிலே ஒரு மனுஷனும் மனுஷியும் படகில் ஏறியபடி சலப்பிரளயத்தில் மிதந்துபோகும்பாவனை காட்டியிருக்கிறது. பிரளயம் முடிந்தபின் உலகில் உதித்த மனிதர் ஊமைகளாயிருந்தனர். அன்னோருக்குப் புறாவொன்று மரஉச்சியிலிருந்துகொண்டு நாக்கினைக் கொடுக்கின்றது. பிச்சிதீவார்சொல்லும் வரலாற்றின்படி, அவர்களது நாட்டில் ஆதிமனிதனும் ஸ்த்ரீயும் குடியேறியபின் ஒரு பெருமழைபெய்து பூமியெல்லாம் நீரில் ஆழ்ந்துவிட இரு பெரிய தோணிகள் தோன்றின. ஒன்று தச்சருடைய தெய்வமாகிய பொக்கோருடையது. மற்றது அத்தெய்வத்தின் வேலைக்காரனுடையது. இரண்டு தோணியிலும் எண்மர்மட்டும் ஏறிக்கொள்ள மற்ற அனைவரும் மாண்டுபோனார்கள். இவ்வாறாக உலகம் முழுவதிலும் அறுபதுக்குமேற்பட்ட வேறு வேறு பழங்குலங்கள் சலப்பிரளயவரலாற்றைத் திரித்தும் குறைத்தும் கூட்டியும் சொல்லிக்கொண்டுவந்திருக்கின்றன.*

தமிழ்நாட்டிலே கேட்கப்பட்டுள்ள சலப்பிரளயவரலாறு கல்தேயர் எபிரேயருடைய ஆதிவரலாற்றை மிகவும் ஒத்தது. ஆதிநாட்களிலேயே தமிழ்நாட்டிற் சலப்பிரளயக்கதை வழங்கியிருந்து, தமிழருள்ளிருந்து ஆரியருள்ளும் பரந்து ஸம்ஸ்கிருதப் பழையநூல்கள் சிலவற்றிலும் ஏறிக்கொண்டது என அறிஞர்கள் கூறுவார்கள். ஸம்ஸ்கிருத அதர்வணவேதமும் சதபதப்பிராம்மணமும் இன்றைக்குத் தமிழிற் காணப்படுகின்ற பண்டைத் தமிழ்நூல்கள் அனைத்திலும் மிகப் பழமைவாய்ந்தவை. அதர்வணவேதத்திற் சலப்பிரளயத்தைப்பற்றிய சிலகுறிப்புக்களும் சதபதப்பிராம்மணத்தில் ஒரு நெடிய வரலாறும் உண்டு. பிராம்மணத்தின் வரலாற்றை எடுத்துக்கூறின் மனு என்பவருக்குக் காலையில் கைகழுவத் தண்ணீர்கொண்டுவரப்பட்டபோது அதனுள் இருந்த ஒரு சிறுமீன் அவர் கையில் அகப்பட்டது. அம்மச்சம் மனுவைப்பார்த்து: ஐயா! நீர் என்னை வளர்ப்பீராயின் நான் உம்மைப் பாதுகாப்பேன் என்றது. எதிலிருந்து என்னைப் பாதுகாப்பாய் என்று மனு வினவ, அது: ஒரு வெள்ளம் சகல சிருட்டிகளையும் அள்ளிக்கொண்டுபோக இருக்கிறது. அதிலிருந்து உம்மைப் பாதுகாப்பேன் என்றது. இனி, யான் உன்னை எவ்விதமாய் வளர்க்கவேண்டும் என்று மனு கேட்க, அது: நாங்கள்

* Manuel Bibilique I 599.

சிறுமீன்களாயிருக்கும்நாளில் எங்களுக்குப் பலவிதத்திலும் ஆபத்து உண்டு. பெரியமீன்கள் சிறு மச்சங்களைத் தின்றுவிடும். ஆதலால், என்னை முதலில் ஒரு சாடியில் விடும். நான் அதற்குள் அடங்காமற்போனபின், ஒரு கிடங்கு அகழ்ந்து அதில் என்னை வாழச்செய்வீர். அதற்குள்ளும் அடங்காதபடி நான் வளர்ந்தபின், என்னைக் கடலிற்கொண்டுபோய் இறக்கிவிடுக. அங்கு அப்பால் எனக்குச் சேதம் விளையாது என்றது. பின் அந்த மச்சம் பெரிய மீனாகியபோது மனுவைப்பார்த்து: இன்ன வருடத்திற் சலப்பிரளயம் உண்டாகும்; எனது சொல்லைக்கேட்டு ஒரு கப்பலைக்கட்டுக. பிரவாகம் எழுந்து வரும்போது நீர் கப்பலில் ஏறிக்கொள்ள நான் உம்மைச் சலப்பிரளயத்திலிருந்து மீட்பேன் என்றது. மனு இதைக்கேட்டு மீனைக் கடலிற்கொண்டு போய்விட்டார். பின்னும் அது குறிப்பிட்டவருடத்தில் அவர் ஒரு கப்பலை ஆயத்தப்படுத்திவைத்திருந்து சலம் பிரவகித்தபோது அதிற் புகுந்துகொண்டார். அவ்வேளை மீனானது அவரையடுத்து நீந்திக்கொண்டுவரவே, அவர் அதன்கொம்பிலே கப்பலின் வடத்தைக் கட்டிவிட்டார். விடுதலும், அந்த மச்சமானது கப்பலை விரைவாய்க்கொண்டுபோய் வடக்குமலையிற் சேர்த்தது. அதன்பின் மீன் அவரைநோக்கி: இதோ உம்மைப் பாதுகாத்துவைத்தேன். கப்பலை ஒருமரத்திற் பிணித்துவைத்து வெள்ளம் வடிய வடிய நீரும் மெல்ல மெல்லத் தரையில் இறங்கக்கடவீர் என்றது. அவர் அவ்வாறே இறங்கினர். சலப்பிரளயமோ சகலசிருட்டிகளையும் வாரிக்கொண்டுபோய்விட்டதனால் மனு ஒருவரே பூமியில் மிகுந்திருந்தார். பின்பு அவர் சந்ததியை விரும்பித் தவம்பண்ணத்தொடங்கினர். அவர் பலநாள் தயிரும் நெய்யும் நிவேதித்துத் தவஞ்செய்தபின், ஒருவருடக்கடைசியில், அவருடைய தவமெல்லாந் திரண்டு இடா என்னும் பெண்ணுருவாகி அவர்முன்னே வெளிப்பட்டது. மனு அவளைப் புணர்ந்து மறுபடியும் மனுக்குலத்தை ஈன்றார்.*

வடமொழியில் இது பழைய வரலாறாயிருப்பினும் இதிற் சிலதுறைகள் அறைகுறையாய் விட்டிருப்பதால் இது அதிக விவரமான ஒரு வரலாற்றிலிருந்து சுருக்கியெடுக்கப்பட்டது எனத் தோன்றும். அறைகுறையாய் விட்டனவற்றுள் மனுவுக்கு அறிவுறுத்திய மச்சம் யாராகவேண்டும் என்பது மிக வேண்டப்பட்ட ஒரு தனித்துறை. இவ்விவரங்கள் பிந்தியநூலாகிய மகாபாரதத்திற் கிடைக்கின்றன. மனு என்பவர் விவஸ்வான்மகனுவார்; தவத்தில் மிகுந்தவர்; சிறினி (பாலாறு) ஆற்றங்கரையில்வந்த சிறுமீனை எடுத்து முன் ஒரு சாடியிலும், பின் ஒரு குளத்திலும் அப்பால் கங்கையிலும்

* Sacred Books of the East. Vol. XII.

விட்டுத் தம் மைந்தரைப்போல் வளர்த்து ஈற்றிற் சமுத்திரத்தில்விட்டவர்; சமுத்திரத்தில் பென்னம்பெரிய உருவை அடைந்த மச்சம் மனுவுக்குக் கூறியவைகளும் மகாபாரதக்கதையில் அதிக விளக்கமாகின்றன. அவை, உலகங்களைத் தூய்தாக்கும்பொருட்டுச் சலப்பிரளயம் உண்டாகப்போகின்றது. மனு ஒரு பல்மான கப்பலைச்செய்து அதைக்கட்டும் வடத்தையும் அதில் தொடுக்கவேண்டும். அதில் அவருடன் சப்த இருடிகளும் ஏறவேண்டும். அன்றியும், சகல விதைகளும் அதிற் சேர்க்கப்படவேண்டும் என்பனவாம். அப்பால் சலப்பிரளயம் நெடுநாள் நிலைபெறவே, மச்சமானது தன் கொம்பிற் பிணைத்த கப்பலைப் பலவருடங்கள் சலியாது இழுத்துக்கொண்டுசென்று இமயமலையின் அதியுயரமான சிகரத்திற் சேர்த்தது. அச்சிகரம் இன்றும் நௌபந்தனம் (கப்பல்கட்டியது) எனும் பெயருள்ளதாகின்றது. மச்சம் ஈற்றில் இருடிகளிடம் பிரசாபதியான பிரமா நானே. என்னிலும் மேலாக உயர்ந்தது ஒன்றும் இல்லை. நானே ஒரு மீனுருவங்கொண்டு உங்களை இந்தப் பெரிய ஆபத்திலிருந்து இரட்சித்தேன். மனுவானவர், இனி, தேவர் அசுரர் மனிதரையும், அகில உலகங்களையும், தாவர சங்கமமான சகலபொருள்களையும் சிருட்டிக்கக்கடவர்: என்றுசொல்லி அந்தர்த்தானமாயிற்று.

மனு சனலோகத்தைப் பலுகப்பண்ணியவர் என்று வரலாறுகள்காட்ட, அவர் சகலலோகங்களையும்படைத்தார் என்று வந்தமை புராணங்களுக்குரிய ஒரு அதிசயோக்தியாம். இவ்விதமான பாராட்டுரைகள் மத்ஸ்யபுராணத்தில் மேலும் அதிகமாய் வருகின்றன. அதில் மகாமச்சமாகவந்தவர் பிரமா அல்ல, விட்டுணு ஆகிறார். மனுவும் ஒரு மகானுபாவரான அரசர்; தம் குமாரனிடம் இராச்சியபாரத்தை ஒப்பித்துவிட்டு மலைநாட்டின் ஓர் பிரதேசத்தில் பத்து லட்சம் ஆண்டு அருந்தவம்புரிந்துகொண்டுவந்தவர். அவர் தமது பன்னசாலையில் பிதிர்க்களைநோக்கி அர்க்கியம் கொடுக்கும்வேளையில் ஒரு சிறுமீன் தண்ணீரோடு அவர்கையில் வந்தது. அப்பால், முன்சொன்ன முறையில் அது சமுத்திரத்தில் பெருத்து வளர்ந்தபின், மனுவுக்கு அறிவித்தவைகளுள் ஒரு விசேஷம் அவரும் சகல சீவபிராணிகளும் ஏறவேண்டிய கப்பலைத் தேவர்கள் அனைவரும் சேர்ந்து செய்தார்கள் என்பது. பிரளயத்தின்பின் மனு தாமே பிரசாபதியாய், சிருட்டிகர்த்தாவாவார் என்றும் சொல்லப்படுகிறது. மச்சத்தின்கொம்பிலே கப்பலைப் பிணைப்பதற்கு உதவிய கயிறு அனந்தன் எனும் சர்ப்பமே என்றதும், சலப்பிரவாகம் ஊழிதோறும் நிகழும் புராணகற்பனையான மன்வந்தரப் பிரளயமாக மாற்றப்பட்டதும் வேறு விசேஷங்களாகும்.

பாகவதபுராணத்தின் மச்சாவதாரவரலாறும் பழைய சலப்பிரளயக் கதையை ஒட்டியதே என்பதில் மயக்கமில்லை. இதில், கல்தேயவரலாற்றிலே தெய்வமானது நூல்களைக் காப்பாற்றும்படி அரசனுக்குக் கட்டளையிட்ட விவரம் அயக்கிரீவன் வேதங்களைக் களவாடியதால் அவற்றை மீட்க விட்டுணு பகவான் மச்சமாக வந்ததாய் மாறியிருக்கிறது. மனுவும் திராவிடதேசத்துச் சத்தியவிரதன் எனும் உத்தம அரசனுகிருர். ஆயினும், இவரே பின் வரும் ஊழியில் விவஸ்வான்மகனுன மனுவாய் வராமற்போகவில்லை. விஷ்ணுபத்தியிற் சிறந்தவரான சத்தியவிரதன் கிருதமாலை (வைகை) எனும் ஆற்றில் அர்க்கியங்கொடுத்துக்கொண்டிருக்குங்கால், முன்வரலாறுகளின் படி, சிறுமீனென்று அவன்கையில் அகப்படுகின்றது. ஏனைய விவரங்கள் முன்போலச் சிறிதுசிறிது மாற்றத்துடன் வருகின்றன. சமுத்திரத்தில் விடப்பட்ட மச்சம் சொல்லுவது: 'இன்றைக்கு ஏழாம்நாளில் மூவுலகங்களும் பிரளயவெள்ளத்தால் மூடுண்டுபோம். உலகமெல்லாம் சமுத்திரத்தில் ஆழும் போது நான் அனுப்பும் பெரியகப்பல் ஒன்று உன்னை நோக்கிவரும். ஓஷதிகளையும் பலவிதமான விதைகளையும் நீ எடுத்துக்கொண்டு சப்தரிஷிகளும் புடைசூழச் சகலபிராணிகளோடும் மகா மிதவையில் ஏறிப் பயப்படாமல் இருண்டசமுத்திரத்தின்மேற் செல்லுவாய். புயற்காற்ருல் கப்பல் மீசுரமாய் அலையுண்ணும்போது, மகாசர்ப்பத்தை வடமாகக்கொண்டு எனது கொம்பில் அதைக் கட்டுவாய். நான் உன் அருகில் நிற்பேன்' என்பது. மச்சரூபியான விஷ்ணுபகவான் விளம்பியபடியெல்லாம் நிறைவேறவே, அவர் அயக்கிரீவனைக் கொன்று வேதத்தை மீட்கின்ருர். சகல லௌகிக வைதிக அறிவிலும் வல்லவரான சத்தியவிரதராசா சனுர்த்தனனின் திருவருளால் விவஸ்வான்மகனுப், நிகழும் ஊழியின் மனுவாய் வந்தார். இச்செய்தியெல்லாம் அக்கினிபுராணத்திலும் அதிக மாற்றமின்றிச் சுருக்கிக் காட்டப்பட்டுள்ளன.

சதபதப் பிராம்மணத்திலும் இதிகாசபுராணங்களிலும் உள்ள சலப்பிரளயவரலாறு ஆரியர் இந்தியாவினுள் நுழையுமுன்னும் தமிழருள் வழங்கியதே என்பது ஆராய்ச்சியாளர் கருத்து. சூரியவமிசத்தவரான மனு மலயத்தில் தவங்கிடந்தார் என்றதும், சத்தியவிரதன் கிருதமாலை எனும் வைகையாற்றங்கரையில் அர்க்கியம் கொடுத்தார் என்றதும் மீனவர் ஆகிய பாண்டியரின் பழைய இலாஞ்சனையான மீன் உருவமாகவே தெய்வம் அவருக்குக் காட்சியளித்தது என்றதும் பிறவும் சலப்பிரளயத்தின் இந்திய வரலாறு தமிழ்நாட்டிலிருந்தே ஆரியருக்குக் கிடைத்தது எனக் காட்டும் என்பர். இவ்வரலாற்றைப்பற்றிய ஒரு அற்பசூசனையாவது ஆரியரது பழைய

நூலாகிய இருக்குவேதத்திற் காணப்படாமையும், அதில் விளங்குகின்ற பலவேறுவகைப்பட்ட ஐதிகங்களுக்கு இது மாறுபட்டிருக்கின்றமையும் இங்கு நோக்கத்தக்கன. ஆகவே தமிழ்நாட்டில் மனு என்றும் சத்தியவிரதன் என்றும் சொல்லப்பட்ட பத்திமானும் எபிரேயருடைய நோவாவும் ஒருவரே என்பர் ஆன்றோர். மகாநோவா எனும் பெயர் மனுவாயிற்று எனவும் சில்லோர் பொருந்தவோ பொருந்தாமலோ கூறுவர். இனி, நோவாவின் சலப்பிரளயம் ஆதிகாலங்களில் பபிலோனியர் கல்தேயர் ஆதியோர் வசித்திருந்த பிரதேசத்தில் நடந்த ஒரு உண்மைச்சம்பவமே என்பது பல ஏதுக்களைக்கொண்டு நாட்டப்படுகின்றமையால், அச்சம்பவத்தைத் தங்கள் ஆதி வரலாற்றோடு ஒட்டிக்கூறுகின்ற தமிழரும் ஒருகால் அப்பிரதேசங்களிலிருந்து பிரிந்துவந்தவர்களே எனற்கு இதுவும் ஓர் ஏதுவாகலாம் என்க.

சமாதிக்கல்லடுக்குகள்

இனி, தமிழரது மிகப்புராதனமான வழக்கங்களுள் ஒன்றை ஆராய்வோம். இந்தியா எங்கணும், முக்கியமாய் வடமேற்கு எல்லையை அடுத்தும், தக்கிணத்திலும் நூற்றுக்கணக்கான பழங்காலத்துச் சமாதிகள் அழிந்தநிலையிற் காணப்படுகின்றன. அவைகளுள் ஒருவகையானவை ஐரோப்பாவில் கல்வட்டங்கள் (Stone circles) எனப்படுகின்ற சமாதிகளைப்போன்றவை. கல்வட்டங்கள் எப்போதும் வட்டாகாரமானவைகளல்ல. பெரும்பாலும் முட்டைவடிவானவை, சில நெடுஞ்சதுரப்போக்கானவை. பரும்படியான பாரிய கற்கள், கூடியநீளம் பெரும்பாலும் எட்டு அல்லது பத்து அடியும் கூடிய அகலம் ஆறு ஏழு அடியும் கொண்ட நிலத்தைச் சூழ வட்டமாய் நாட்டியிருக்கும். நிறுத்திய கற்களால் அடைபட்ட நிலப்பாகம் மதிலிட்ட சிறு அரண்போல்விளங்கும். எங்காலத்துப் பழைய மனிதர் இவைகளைப் பஞ்சபாண்டவர்மேடு என்பார்கள்.* வரலாறு தெரியாத பெரும் கைவேலைகளையெல்லாம் பஞ்சபாண்டவருக்குக் கொடுத்தோதும் வழக்கத்தை வேறு தொடர்புகளிலும் காண்கின்றோமன்றோ! கல்வட்டங்களைப் பண்டைக்காலத்தார் குடியிருந்த இல்லங்கள் என்று சிலர் எண்ணுவதுபோலச் சொல்லிவிட நியாயமில்லை. ஏனெனில் உள்ளே எல்லாவற்றிலும் காணப்படுகின்ற சரமக்கிரியைக்குரிய பாத்திரங்களும் சிலவற்றிற் கண்டெடுத்த பிரேதச்சாம்பரும் இவைகள் இறந்தோரின் சமாதிகளே என அறுதியிடுகின்றன.

---

*See Rude stone monuments of the Perumal Hills, Kodaikanal, in Q Journ. of the Myth. Soc. XXXI, pp. 373 and Seq.

கல்வட்டங்களைப்போலவே குழிக்கல் (Dolmen) அல்லது மூடுகல் (Cromlech) என்று ஐரோப்பியர் சொல்லுகின்ற சமாதிகளும் பல தென்னிந்தியாவில் இன்றைக்கும் காணப்படுகின்றன. இவைகள் நிறுத்திநாட்டிய இருபெருங் கற்பலகைகள்மேல் ஒருகற்பலகை கவித்திருப்பன. இவைகளும் எட்டுக்கெட்டாத பழங்காலத்துத் தமிழர் பிரேதசேமஞ்செய்த கல்லறைகளே என்பது ஆராய்ச்சியுலகத்தின் துணிபு.

கல்வட்டச்சமாதிகளும் குழிக்கற்சமாதிகளும் இந்தியாவிற்போலப் பிரித்தானியாவிலும் தெற்கு ஸ்பானியாவிலும் போர்த்துக்கல்லிலும் பொதுவாக மத்தியதரைக்கடற்கரைத்தேசங்கள் தீவுகளிலும் கண்டுபிடிக்கப்பட்டன. இவற்றுட் சில கல்வட்டங்கள் பதினைந்தடிவரையில் உயர்ந்த கற்கள்நாட்டி அமைத்தன. குழிக்கற்களும் பெரியவை. இவைகளை எங்கும் ஒரே விதமாய்ச் செய்துவைத்தவர்கள் முற்காலம் ஓரிடத்திலிருந்து பிரிந்துபோன தனிக்குலத்தவர்களே என்று தோன்றும். ஐரோப்பாவின் பலபாகங்களிற் பின் குடியேறிய ஆரியர் ஆதியோர் இறந்தோரை இவ்விதமாய்ச் சேமிப்போரல்ல. இன்றைக்கு நாலாயிரம் ஆண்டுகளின்முன் இந்தியாவில்வந்து குடிகொண்ட ஆரியர் பிரேதசேமஞ்செய்த முறையும் இதுவல்ல. ஆதலால், ஆரியர் இந்தியாவில் வந்திறங்கிய காலத்திற்குமுன், ஒருவேளை அதற்கும் பலநூற்றாண்டுகளின்முன், யாதோ ஓர் நடுவிடத்திலிருந்து புறப்பட்டுப் போன பழங்குலத்தவர்கள்தாம், ஐரோப்பாவிலும் ஆசியாவிலும் பரந்து குடிகொலியிருந்து, இவ்வித பிரேதசமாதிகளை விட்டுப்போயினர் என்று முடிப்பது அவசியமாகின்றது. இப்பழங்குலத்தவர்கள் யார்?

மத்தியதரைக்கடலின் வடகோடியிலுள்ள சிரியாவையடுத்த பினீசியா எனும் நாட்டவர்கள், பூர்வம் துத்தம் முதலிய உலோகங்களைத்தேடித் தூர தேசங்களுக்குக் கடல்மார்க்கமாய்ச் சென்றவர்களே கல்வட்டச்சமாதிகளையும் மூடுகற்சமாதிகளையும் ஆங்காங்குச் செய்துவைத்தார்கள் என்றது சிலரது அபிப்பிராயம்.* உலோகங்கிடக்கும் இடங்களைக் கண்டுபிடித்துச் சுரங்கந்தோண்டியவர்களும் வியாபாரிகளானோரும் மட்டில் அச்சமாதிகளை உண்டுபண்ணினர்கள் என்றால், அவைகள், கடலோரங்களிலும் துத்தம் ஆதிய உலோகங்கள் கிடைத்த இடங்களிலுமே காணப்படவேண்டும். அவ்வாறாகாமல் சமாதிகள் உள்ளூர்களிலும் உலோகவகைகள் கிடைக்கப்பெறாத பிரதேசங்களிலும் பரந்து பலநூற்றுக்கணக்காய்க் கிடத்தலினால்,

* See L. A, Waddel Phoenisian Origin of Britons etc. p. p. 216 and Seq.

வந்துபோய்க்கொண்டிருந்த வேலையாட்கள் வியாபாரிகள் அல்லது குடித் தலைவர்களாய் நிலைத்திருந்தவர்களே அவ்வித சமாதிகளைத் தங்கள் இறந்தோருக்குச் சமைத்தார்கள் என்னல்வேண்டும். ஆதலால் போக்குவரத்தான பினீசிய உலோகவியாபாரிகள் அல்லது அப்பினீசியரோடு ஒத்த பழக்க வழக்கங்களுள்ள ஒரு குலத்தவர்களே பண்டு பிரித்தானியாமுதல் இந்தியா ஈறாகப் பரந்திருந்தமை அச்சமாதிகளால் வெளிப்படுகின்றது. வேறு வகையில் பினீசியரைத் தமிழரோடு ஒற்றுமைப்படுத்தும் மேதாவிகளும் உளர். கிரேக்கமொழியில் அவர்கள்பெயர் பொயினிக்கே என்பது. அதைப் பொயினிக் அல்லது பொயினிக்ஸ் எனவும் சொல்லுவர். இச்சொற்குக் கருஞ் சிவப்பு எனும் கருத்துள்ளது என்பர். கருஞ்சிவப்புநிறப்பெயர் அப்பிர தேசத்தாரது உடல்வண்ணத்திலிருந்து எழுந்தது என்பது சில்லோர்மதம். தற்காலத்து அறிஞர்கள் சிலர், பொயினிக் என்னும் சொல் தமிழ்ப்பனைச் சொல்லின்திரிபு என எண்ணுவர். பினீசியருடையநாடு பனை (ஈந்து, இனிப் புப்பனை) நிறைந்ததால் பனைநாடு என்ற பொருளுள்ள பினீசியா எனப்பட்டது என்றும், நாட்டின் பெயரால் அந்நாட்டவர்க்குப் பெயர் பினீசியர் என்றாயிற்று என்றும் கருதுவர். வேறு எதுக்களைக்கொண்டும் பினீசியர் மத்தியதரைக்கடலையடுத்த ஆதிக்குலங்களுக்கும் தமிழருக்கும் இனமானவர்களே என்று பெறப்படுகின்றமையால், பினீசியருள் மிகப்பயின்ற பிரேதச் சமாதிமுறைகளே ஆதித் தமிழருள்ளும் பயின்றன என முடித்தல் சாத்தியமாகின்றது. இந்தியாவிலும் பிற இடங்களிலும் உயர்ந்த கற்றூண்களாற் சமைக்கப்பட்டுள்ள சில அகன்ற கல்வட்டங்களைத் "துருயிதர் வட்டங்கள்" எனச் சொல்லுவர். இவை சூரியநிலையைக்கொண்டு பருவங்களைக் குறிப்பிட்டு விழாக்களின்காலத்தை நியமித்தற்கு உபயோகிக்கப்பட்டவை என்பர். துருயிதருக்கும் தமிழருக்கும் இடையில் கருதப்படுகின்ற ஒற்றுமையைச் சுட்டி முன்னோர் அமயத்திற் சில சொன்னோம்.

மத்தியதரைக் கடலோரத்தவர்களுக்கும் தமிழருக்கும் ஒத்த ஐதிகங்களுள்ளும் பழக்கவழக்கங்களுள்ளும் பல சமயசம்பந்தமானவை. மேலதிகாரங்களில் இவற்றை விரிவாய் நோக்குவோம். ஆதலால், இங்கு இவ்விஷயத்தை இம்மட்டில்விட்டு அப்பாற்செல்லுவோம்.

II. செந்தமிழ்ப்பிரசுரம்.

1	ஐந்திணையைம்பது (உரையுடன்)	0	4	0
2.	கணூல் (5) இனியதுநாற்பது (உரையுடன்) ...	0	3	0
3.	*வளையாபதிச்செய்யுட்கள்			
4.	புலவராற்றுப்படை	0	3	0
6.	*நேமிநாதம் (உரையுடன்)			
7.	திருநூற்றந்தாதி (உரையுடன்)	0	6	0
8.	திணைமாலைநூற்றைம்பது (உரையுடன்) ..	0	8	0
9.	அநுமானவிளக்கம்	0	10	0
10.	அட்டாங்கயோகக்குறள்	0	2	0
11.	*விவசாயரசாயன சாஸ்திரச்சுருக்கம்			
12.	*பன்னிருபாட்டியல்			
13.	நான்மணிக்கடிகை (பழைய உரை)	0	4	0
14.	முத்தொள்ளாயிரச்செய்யுட்கள்	0	3	0
15.	*திருச்செந்திற்கலம்பகம்			
16.	திருவாரூருலா	0	8	0
17.	சுகசந்தர்சனதீபிகை	0	12	0
18.	இயற்கைப்பொருட்பாடம்...	0	4	0
19.	தேவையுலா	0	3	0
20.	*நரிவிருத்தம்			
21.	சிதம்பரப்பாட்டியல் (உரையுடன்)	0	8	0
22.	*திருக்கலம்பகம் (ஷை)			
23.	*விக்கிரமசோழனுலா			
24.	குருமொழிவினாவிடை	0	1	0
25.	கேசவப்பெருமாள் இரட்டைமணிமாலை... ...	0	2	0
26.	திருத்தணிகைத்திருவிருத்தம்	0	1	0
27.	மதுரைத்திருப்பணிமாலை	0	8	0
28.	*சந்திராலோகம்			
29.	*சோழவம்சசரித்திரச்சுருக்கம்			
30.	ஞானாமிர்தக்கட்டளை	0	3	0
31.	*பாண்டியம்			
32.	மநீஷாபஞ்சகம்	0	8	0
33.	*வேளிர்வரலாறு			
34.	*அகப்பொருள்விளக்கம்			
35.	*திருமந்திரநூறுபாட்டுக்குறை			
36.	உவமானசங்கிரகம்	0	1	0
37.	மாறனலங்காரம் மூலமும் உரையும்	4	8	0
38.	திருப்புல்லாணிமாலை	0	2	0
39.	*பழமொழி மூலமும் பழையவுரையும் (முதல் 100 செய்)			
40.	திருமாலிருஞ்சோலைமலை அழகர்பிள்ளைத்தமிழ் ...	0	8	0
41.	பொருட்டொகைநிகண்டு	0	6	0
42.	அகராதிநிகண்டு	0	12	0

43.	மேகவிடுதூது	0	2	0
44.	திருக்குற்றாலமாலை	0	2	0
45.	தண்டலையார்சதகம்	0	4	0
46.	இராமோதந்தம்	0	3	0
47.	பழமொழிமூலமும் பழைய உரையும் (2-வது 100செய்)	1	0	0
48.	சேதுநாடும் தமிழும்	0	6	0
49.	*கடைவள்ளலார்காலம்			
50.	*தமிழரும் ஆந்திரரும்			
51.	*மதங்கசூளாமணி			
52.	கூடற்புராணம்	0	10	0
53.	திருவள்ளுவர் (தமிழ்)	0	6	0
	ஷை (ஆங்கிலம்)	0	6	0
54.	அரும்பொருள்விளக்கநிகண்டு	1	4	0
55.	மாறனகப்பொருளும் திருப்பதிக்கோவையும்	0	12	0
56.	பாப்பாவினம்	0	10	0
57.	மதுரைமும்மணிக்கோவை	0	5	0
58.	பழனிப் பிள்ளைத்தமிழ்	0	3	0
59.	கடம்பர்கோயில் உலா	0	6	0
60.	சங்கரநயினார்கோயில்அந்தாதி	0	6	0
61.	கலைசைக்கோவை	0	12	0
62.	பெருந்தொகை	5	0	0
63.	சூடிக்கொடுத்தநாய்ச்சியார்தோத்திரப்பாமாலை	0	5	0
64.	சிராமலைக்கோவை	0	12	0
65.	மத்யமவியாயோகம்	0	2	0
66.	*சந்திரகுப்தன்			
67.	அமிர்தரஞ்ஜனி	0	2	0
68.	திருமுருகாற்றுப்படை	0	10	0

* இவ்வடையாளமிடப்பட்டவை இப்போது கைவசமில்லை.

குறிப்பு:-1. சங்கத்தினின்று மாதமொருமுறை அரிய பெரிய விஷயங்களைக்கொண்டுவெளியாகிவரும் இச்"செந்தமிழ்"ப்பத்திரிகைக்கு வருஷச் சந்தா ரூ 4. தனிப்பிரதியின் கிரயம் அணா 8. வெளிநாடுகளுக்கு வருஷச் சந்தா ரூ 4—8—0. இதுவரை 39 தொகுதிகள் பூர்த்தியாயிருக்கின்றன. இவற்றுள் 1, 2, 3, 6, 7, 8, 9, 10, 16-ம் தொகுதிகள் கைவசமில்லை. பைண்டு செய்யப்பெறாததொகுதிகள் தொகுதி 1-க்கு ரூ 4—0—0-வீதமும், பைண்டு செய்யப்பெற்ற தொகுதிகள் தொகுதி 1-க்கு ரூ 5—0—0 வீதமும் விற்கப்பெறும். வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

2. சங்கப்பிரசுரம், செந்தமிழ்ப்பிரசுரம், செந்தமிழ் முழுத்தொகுதி— இவற்றுள் ஒவ்வொருபுத்தகத்திலும் ஒரேதடவையில் 10 பிரதிகளும் அதற்கு மேற்பட்டும் வாங்குவோர்கட்கு மொத்தக்கிரயத்தொகையில் 100க்கு 10 வீதம் கமிஷன் தள்ளிக்கொடுக்கப்படும்.

3. சங்கப்பதிப்புப்புத்தகங்களை, ஒரு ரூபாய்க்கும் அதற்கு மேற்பட்டும் வாங்குவோர்கட்கு, ரூபா ஒன்றுக்கு அரை அணா வீதம் கமிஷன் தள்ளிக் கொடுக்கப்படும்.

லக்ஷ்மீநாராயணையர், மானேஜர்.